

(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 4(11).]

பாராளுமன்றத்தின்
4 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

2026 நவம்பர் 06, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

2026 நவம்பர் 14, சனிக்கிழமை
பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கான, பாராளுமன்றத்தின் தீர்மானத்தால் நிர்ணயிக்கப்படும் ஊதியம் வழங்கப்படுவதுடன் அத்தகைய ஊதியம் 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 6(6) இன் கீழ் இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் நிதியத்திற்குப் பொறுப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன்;

பொறியியல், சட்டம் அல்லது வணிக முகாமைத்துவத் துறையில் தகுதியும் அனுபவமும் பெற்ற ஐந்து ஆணைக்குழு உறுப்பினர்களை, அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடன் அமைச்சரால் நியமிப்பது தொடர்பான சட்டத்தின் பிரிவு 6(6) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளைப் பரிசீலித்து, ஆணைக்குழு உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்புகளின் அளவை அங்கீகரித்து, இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு ஊதியம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளைப் பின்வருமாறு வழங்குவதற்கு, 2026.09.14 ஆந் திகதிய 26/1892/804/220 ஆம் இலக்க அமைச்சரவையின் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாலும்;

ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள்	**தவிசாளர்**	**உறுப்பினர்கள்**
மாதாந்த கொடுப்பனவு	ரூபா. 200,000.00	ரூபா.100,000.00
மாதாந்த போக்குவரத்துக் கொடுப்பனவு/ வாகனம்	வாகனம்	அலுவலக பணிகளில் பங்கேற்பதற்காக ஏற்படும் போக்குவரத்து மற்றும் இதர அமையச் செலவுகள்.
மாதாந்த எரிபொருள் வரையறை / லீட்டர்	150 லீட்டர்	-
மாதாந்த தொடர்பாடல் கொடுப்பனவுகள்	தொலைபேசி கட்டணத்தை மீளளிப்புச் செய்தல்	தொலைபேசி கட்டணத்தை மீளளிப்புச் செய்தல்

அதன் பிரகாரம், இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவானது, ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கு, 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 6(6) ஆம் பிரிவின்படி, இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் நிதியிலிருந்து மேலே குறிப்பிடப்பட்ட ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும் என பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

2026 நவம்பர் 17, செவ்வாய்க்கிழமை
பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2026, நவம்பர் 30, திங்கட்கிழமை)

2254/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்காக இந்தியாவுடன் மின்சாரம், டிஜிட்டல், எரிபொருள் குழாய்வழி மற்றும் போக்குவரத்துத் தொடர்புகளை மேம்படுத்திக்கொள்வது பொருத்தமானது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அதற்காக, 2025.04.05 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த திகதியில் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த ஒப்பந்தங்கள் ஒவ்வொன்றின் மூலமும் நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கும் அடிப்படை நோக்கங்கள் மற்றும் இலக்குகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையேயான பாக்கு நீரிணையில் மூலோபாய உட்கட்டமைப்பு வசதிகள் வழித்தடத்தின் நிர்மாணப் பணிகளில் இதுவரை அடையப்பெற்றுள்ள முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) ஒரு பகுதி மேம்பாலமாகவும், எஞ்சிய பகுதி கடலடிச் சுரங்கப்பாதையாகவும் கொண்ட ஒரு நேரடி இணைப்பை ஏற்படுத்துவது குறித்து இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே இன்றளவில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) அக்கருத்திட்டத்தின் மூலம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் கிடைக்கின்ற இருதரப்பு நன்மைகள் யாவையென்பதையும்;

(iv) அக்கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2026, டிசெம்பர் 01, செவ்வாய்க்கிழமை)

2464/2026

கௌரவ துரைராசா ரவிகரன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1AB, 1C, 2 மற்றும் 3 வகை பாடசாலைகளுக்கு இணையம், தொலைபேசி மற்றும் மின் கட்டணங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட மாதாந்த நிதி ஒதுக்கீடு;

(ii) 2022ஆம் ஆண்டு தொடக்கம் 2026ஆம் ஆண்டு வரை தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளுக்கு மேற்படி சேவைகளுக்காக வருடாந்தம் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு;

(iii) அங்கீகரிக்கப்பட்ட தொகையை விடவும் அதிகமான கட்டணங்களைச் செலுத்த நேர்ந்த பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அக்காரணத்தினால் ஏற்பட்ட நிதிப் பற்றாக்குறை;

(iv) நிதி ஒதுக்கீடு போதாமையால் நிலுவைக் கட்டணங்களை கொண்டுள்ள அல்லது மின்சாரம் உள்ளிட்ட சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை;

பாடசாலை வகை மற்றும் மாகாண வாரியாக வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அங்கீகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டை விடவும் அதிகமாகக் காணப்படும் கட்டணங்களைச் செலுத்துவதற்காக வெளித்தரப்புகளிடமிருந்து நிதி உதவியை பெற வேண்டிய நிலைக்கு பாடசாலைகள் தள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) கணினி, திறன் வகுப்பறைகள் உள்ளிட்ட தேவைகளை கருத்திற் கொண்டு, சேவைக்கட்டணங்களுக்காக இதுவரை அங்கீகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளை மீளாய்வுக்குட்படுத்தி அதிகரிப்பதற்கும், நிலுவைக் கட்டணங்களை செலுத்தும் பொறுப்பை அரசாங்கம் ஏற்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) பாடசாலைகளின் மின் கட்டணச் சுமையை குறைப்பதற்காக சூரிய மின்னுற்பத்திப் படலங்களைப் பொருத்துவதற்கான தேசிய வேலைத்திட்டம் ஒன்று செயற்படுத்தப்படுமாயின், அதன் கால வரையறை மற்றும் நிதி ஒதுக்கீடு என்பன யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2026, டிசெம்பர் 02, புதன்கிழமை)

2465/2026

கௌரவ துரைராசா ரவிகரன்,— டிஜிட்டல் பொருளாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச நிறுவனங்களின் இணையத்தளங்கள், இணையவழிச் சேவைகள் மற்றும் தரவுத் தளங்களைப் பாதுகாப்பதற்காக பின்பற்ற வேண்டிய தரநிலைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் கட்டாய நடைமுறைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கட்டமைப்புகளுக்கு இணையப் பாதுகாப்புப் மதிப்பீடு, பாதுகாப்புப் பலவீன மதிப்பீடு மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட ஊடுருவல் சோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய கால இடைவெளி யாதென்பதையும்;

(iii) மேற்படி மதிப்பீடுகள் மற்றும் சோதனைகளை மேற்கொள்வதற்கும், கண்காணிப்பதற்கும் பொறுப்பான நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி மதிப்பீடுகள் மற்றும் சோதனைகளின் மூலம் கண்டறியப்படும் கடுமையான மற்றும் உயர் அபாயமுள்ள பாதுகாப்புக்குறைபாடுகளை நிவர்த்தி செய்தற்காக வழங்கப்படும் கால வரையறை யாதென்பதையும்;

(v) மேற்படி குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துவதற்கான மீள் சோதனை மற்றும் கண்காணிப்புப் பொறிமுறை யாதென்பதையும்;

(vi) உரிய காலப்பகுதியில் மேற்படி பாதுகாப்புக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யத் தவறும் அரச நிறுவனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் தொடர் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2026 டிசெம்பர் 03, வியாழக்கிழமை

வாய்மூல விடைக்கான வினாக்கள்

1005/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) அவர்களுக்குச் செலுத்தப்படும் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய வசதிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்டுள்ள மிகை ஊதியக்கொடுப்பனவுகளின் பெறுமதி ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி மிகை ஊதியக்கொடுப்பனவுகளைச் செலுத்துகின்ற போது கவனத்திற் கொள்ளப்பட்ட அளவுகோல்கள் யாவையென்பதையும்;

(iii) எதிர்காலத்தில் மிகை ஊதியக்கொடுப்பனவை செலுத்துவதற்காக புதிய முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்காக கவனத்திற் கொள்ளப்படும் அளவுகோல்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1226/2025

கௌரவ ரஜீவன் ஜெயசந்திரமூர்த்தி,— மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிராமியப் பிரதேசங்களில் உள்ள முன்பள்ளிகளில் வசதிகள் குறைவாக உள்ளன என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், மேற்படி வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் மற்றும் அவை நடைமுறைப்படுத்தப்படும் காலவரையறை யாது;

(iii) முன்பள்ளிகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக ஆசிரியர்களை பயிற்றுவித்தல், பாடத்திட்டம் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

(iv) முன்பள்ளிகளின் கல்வி, போசாக்கு மற்றும் பொது சுகாதார சேவைகளை உறுதிப்படுத்துவதற்கான கண்காணிப்புப் பொறிமுறையொன்று உள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) முன்பள்ளிகளில் அடிப்படை வசதிகள் குறைவாக உள்ளமை பற்றிய முறையீடுகள் குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(ii) முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் உதவியாளர்களுக்கும் மாதாந்த சம்பளம், ஊக்குவிப்புக் கொடுப்பனவு மற்றும் நன்மைக் கொடுப்பனவுகள் முறையாக வழங்கப்படுகின்றனவா;

(iii) ஆமெனில், அப்பணத்தொகை யாது;

(iv) அனைத்து முன்பள்ளி சிறார்களுக்கும் தரமான போசாக்குமிக்க உணவு போதுமானளவிலும் முறையாகவும் வழங்கப்படுகின்றதா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) முன்பள்ளி அபிவிருத்திக்காக அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி முழுமையாக பயன்படுத்தப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகள் மற்றும் செலவுகள் பற்றிய தரவுகள் பேணப்படுகின்றனவா;

என்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1508/2025

கௌரவ எம். எஸ். உதுமாலெப்பை,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாண சபையின் கீழ் இயங்கும் 'கிழக்கு மாகாண வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை' 2014 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருவதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி அதிகாரசபையினால் மாகாணத்தினுள் இதுவரை நிர்மாணிக்கப் பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி அதிகாரசபையின் கீழ் பணியாற்றும் உத்தியோகத்தர்களின் நியமனத் திகதிகள் மற்றும் பதவிகள் தொடர்பான தகல்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1536/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜெயவர்தன,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது காணப்படும் பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி பொலிஸ் நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் யாவை;

(iii) வாடகைக் கட்டடங்களில் இயங்கும் பொலிஸ் நிலையங்கள் யாவை;

(iv) 2015ஆம் ஆண்டு முதல் இதுவரை அக்கட்டடங்களுக்காக வருடாந்தம் செலுத்தியுள்ள வாடகைப் பணத்தொகை எவ்வளவு;

(v) பொலிஸ் நிலையங்களை இயன்றவரை அரசாங்கக் கட்டடங்களிலேயே இயக்குவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1648/2025

கௌரவ துரைராசா ரவிகரன்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த வருடத்தில் முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட காணியின் அளவும், கிடைக்கப் பெற்ற விளைச்சலும் மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி மாவட்டங்களில் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள குளங்களின் பெயர்களும், அவற்றின் உதவியுடன் செய்கை மேற்கொள்ளப்படும் காணியின் அளவும் யாதென்பதையும்;

(iii) மேற்படி குளங்களுள் பயன்படுத்தப்படாத அல்லது கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் குளங்களும் உள்ளடங்குகின்றனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அக்குளங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மாவட்டங்களில் அமைந்துள்ள கமநலச்சேவை நிலையங்கள் மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி நிலையங்களின் நிருவாகத்தின் கீழுள்ள, தற்போது பயன்பாட்டிலுள்ள மற்றும் கைவிடப்பட்ட நிலையிலுள்ள குளங்களின் பெயர்களும், அவற்றின் கீழ் பதிவுச்செய்யப்பட்டுள்ள காணியின் அளவும் யாதென்பதையும்;

(iii) கைவிடப்பட்ட நிலையிலுள்ள குளங்களுள், வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் அல்லது தொல்பொருளியல் திணைக்களத்தின் கீழுள்ள குளங்களும் உள்ளடங்குகின்றனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அக்குளங்கள் யாவை என்பதையும்;

(v) அவ்வாறான குளங்களை மீண்டும் பொது மக்களின் பாவனைக்காக விடுவிப்பது தொடர்பாக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2026, டிசெம்பர் 03, வியாழக்கிழமை)

2466/2026

கௌரவ துரைராசா ரவிகரன்,— டிஜிட்டல் பொருளாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களால் நிருவகிக்கப்படும் இணையத்தளங்கள், இணையவழிச் சேவைகள் மற்றும் தரவுத்தளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) கடந்த 05 ஆண்டுகளில் இணையப் பாதுகாப்பு மதிப்பீடுகளை மேற்கொண்ட அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவ்வாறு மேற்கொண்ட மதிப்பீடுகளின்போது, கடுமையான அல்லது உயர் அபாயமுள்ள பாதுகாப்புக் குறைபாடுகளைக் கொண்டவை எனக் கண்டறிப்பட்ட இணையத்தளங்கள், இணையவழிச் சேவைகள் மற்றும் தரவுத்தளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) கண்டறியப்பட்ட குறைபாடுகளுள் முழுமையாக நிவர்த்தி செய்யப்பட்ட மற்றும் இதுவரை நிவர்த்தி செய்யப்படாத குறைபாடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2026 டிசெம்பர் 04, வெள்ளிக்கிழமை
வாய்மூல விடைக்கான வினாக்கள்

1197/2025

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாணம் மாவட்டத்தின் நெடுந்தீவில் அமைந்துள்ள யா/நெடுந்தீவு மங்கையற்கரசி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலை எவ்வகைக்குரிய பாடசாலை என்பதையும்;

(iii) பாடசாலையின் கல்விசார் மற்றும் கல்விசாரா ஆளணிக்கு அனுமதிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கையும் தற்பொழுது பணியாற்றும் பணியாளர்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக யாதென்பதையும்;

(vi) நிலவும் வெற்றிடங்கள் இதுவரையில் பூரணப்படுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) வெற்றிடங்களைப் பூரணப்படுத்த எதிர்பார்க்கின்ற காலப்பகுதி யாதென்பதையும்;

(vi) ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக மேற்படி பாடசாலையின் கற்றல் நடவடிக்கைகளுக்கு ஏற்பட்டுள்ள தாக்கங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1686/2025

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தின், வான்எல பிரதேசத்திலுள்ள 'கந்தளாய் வாய்க்கால்', 'வான்எல வாய்க்கால்' எனும் பெயரில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி வாய்க்காலை நிர்மாணிப்பதற்காகச் செலவிடப்பட்ட பணத்தொகை, அதன் மூலம் பயனடையும் விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் நீர் விநியோகிக்கப்படும் வயல் நிலங்களின் அளவு ஏக்கர்களில் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வாய்க்கால் வான்எல முஸ்லிம் குடியேற்றத்திலிருந்து மேலும் 02 கிலோமீற்றர்கள் நீடிக்கப்படாமை காரணமாக, பெருமளவிலான விவசாயிகள் நீரைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வாய்க்காலை 02 கிலோமீற்றர்களால் நீடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1965/2026

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போதுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றுள் மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் எண்ணிக்கை மாகாண வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் நிறுவப்பட்டுள்ள தீயணைப்புப் பிரிவுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) உள்ளூராட்சி நிறுவனங்களில் தீயணைப்புப் பிரிவுகளை நிறுவுவது தொடர்பிலான கொள்கை ஆவணமொன்று அல்லது வழிகாட்டுதல்கள் காணப்படின், அவற்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) இன்றேல், மேற்படி பிரிவுகள் நிறுவப்படுவதற்கான அடிப்படை யாதென்பதையும்;

(vi) தற்போது நிறுவப்பட்டுள்ள தீயணைப்புப் பிரிவுகளுள் முழுத் திறனுடன் இயக்கக்கூடிய பிரிவுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vii) அவ்வாறு இயக்க முடியாத பிரிவுகள் காணப்படின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(viii) எதிர்காலத்தில் தீயணைப்புப் பிரிவுகளை நிறுவுவதற்குத் திட்டமிட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2573/2026

கௌரவ சுகத் வசந்த த சில்வா,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாற்றுத்திறனாளிகளின் தேவைகளைப் பூர்த்திச் செய்யும் வகையில் புகையிரத நிலையங்களிலுள்ள வசதிகளை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென அடையாளங் காணப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) அவற்றின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(iii) செவிப்புலன் குறைபாடுடைய பயணிகளுக்கு புகையிரத தாமதங்கள், புகையிரத மேடை மாற்றங்கள் மற்றும் நேரசூசிகள் தொடர்பான சரியான தகவல்களை வழங்குவதற்காக சமிக்ஞை பலகைகள் மற்றும் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாற்றுத்திறனாளிகளின் புகையிரதப் பயணத்தை இலகுபடுத்துவதற்காக, அனைத்து வகையான மாற்றுத்திறனாளிகளுக்கும் பயன்படுத்தக்கூடிய டிஜிட்டல் செயலியொன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) புகையிரத நிலையங்களில் மலசலகூடங்கள், ஓய்வறைகள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் தங்குமிட வசதிகளைப் பயன்படுத்துவதில் மாற்றுத்திறனாளிகளின் தேவைகளைப் பூர்த்திச் செய்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) மாற்றுத்திறனாளிப் பயணிகளுக்கு உதவிகளை வழங்கும் பொருட்டு புகையிரத நிலையங்களில் உதவிச் சேவை நிலையங்களை நிறுவுவதற்கான சாத்தியம் உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2618/2026

கௌரவ சுனில் றாஜபக்ஷ,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் டிப்போக்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி டிப்போக்களின் பெயர்கள் யாவை;

(iii) மாதாந்தம் இலாபம் ஈட்டும் மற்றும் நட்டம் அடையும் டிப்போக்கள் வெவ்வேறாக யாவை;

(iv) நட்டம் அடையும் டிப்போக்களை இலாபம் ஈட்டும் நிலைக்குக் கொண்டுவருவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நாளாந்தம் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ள பஸ் சேவைத் தடவைகளின் எண்ணிக்கை;

(ii) சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் இல்லாமை, டயர் பற்றாக்குறை, உதிரிப்பாகங்களுக்கான பற்றாக்குறை மற்றும் பஸ் வண்டிகளின் பற்றாக்குறை காரணமாக நிறுத்தப்பட்டுள்ள பஸ் சேவைத் தடவைகளின் எண்ணிக்கை;

ஒவ்வொரு டிப்போ வாரியாக வெவ்வேறாக யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) பற்றாக்குறையாகக் காணப்படுகின்ற டிப்போக்களுக்கு டயர் மற்றும் உதிரிப்பாகங்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக பின்பற்றப்படுகின்ற முறையியல் யாது என்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2026, டிசெம்பர் 04, வெள்ளிக்கிழமை)

2477/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கடற்படைக்காக 287,170 கிலோகிராம் வோட்டர் ஜெல் (Water Gel) வெடிபொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான கேள்விப்பத்திரம் திறக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) அதற்கான விலைமனுக்களைச் சமர்ப்பித்த நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) பெயார்ஸ்டோ ஈவ்ஸ் {Bairstow Eves (Pvt) Ltd} கம்பனி வழங்குநராக தெரிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனம் குறித்த திகதியில் மாதிரிகளைச் சமர்ப்பிப்பதற்குத் தவறியுள்ளது என்பதையும்;

(ii) 2026.08.25ஆம் திகதியன்று இந்நிறுவனத்திற்கு மீண்டும் 07நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டது என்பதையும்;

(iii) மேற்படி கம்பனி அக்காலப்பகுதியினுள்ளும் மாதிரிகளைச் சமர்ப்பிக்கவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) Addendum No. 1 – MOD/SLN/03/2025 இன்படி மாதிரிகளைச் சமர்ப்பிப்பதற்கான ஆகக்கூடிய கால அவகாசம் 14 நாட்களா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், பெறுகை ஒழுங்குவிதிகள் சீராக நடைமுறைப்படுத்தப்படாமை சம்பந்தமாக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) விலைமனு நிபந்தனைகளை மீறிய நிறுவனமொன்றுக்கு அநீதியான முறையில் சலுகைகள் வழங்கப்பட்டிருப்பின், அது தொடர்பில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) வழங்குநரைத் தெரிவு செய்வதற்கான மதிப்பீட்டு அளவுகோல்கள் யாவை என்பதையும்;

(ii) ஏனைய விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) பெறுகைச் செயன்முறையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

2026 டிசெம்பர் 05, சனிக்கிழமை

வாய்மூல விடைக்கான வினாக்கள்

2283/2026

கௌரவ சட்டத்தரணி சரத் குமார,— கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒருவல, உருக்குத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாது என்பதையும்;

(ii) மேற்படி தொழிற்சாலையை ஆரம்பிக்கின்ற போது காணப்பட்ட பிரதான தேசிய மற்றும் பொருளாதார நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) தொழிற்சாலையை தனியார்மயமாக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்ட ஆண்டு மற்றும் அதற்காக பின்பற்றப்பட்ட நடைமுறை யாது என்பதையும்;

(iv) தற்போது இத்தொழிற்சாலையின் உரிமையும் நிர்வாகமும் எந்த நிறுவனம் அல்லது நபரிடம் உள்ளது என்பதையும்;

(v) தொழிற்சாலையின் உரிமையை மாற்றம் செய்யும் போது பின்பற்றப்பட்ட நடைமுறை யாது என்பதையும்;

(vi) அவ்வாறு உரிமை மாற்றம் செய்ததன் மூலம் அரசாங்கத்திற்கு கிடைத்த மொத்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2486/2026

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய பாடசாலைகளிலும் மாகாண சபை பாடசாலைகளிலும் தற்போது சேவையிலுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) தேசிய பாடசாலையின் ஓர் ஆசிரியர் மாகாண சபை பாடசாலைக்கும், மாகாண சபை பாடசாலையின் ஆசிரியர் ஒருவர் தேசிய பாடசாலைக்கும் இடமாற்றம் பெற்றுக்கொள்வதற்காக நடைமுறையிலுள்ள வழிமுறை யாதென்பதையும்;

(iii) தற்போது நடைமுறையிலுள்ள இந்த வழிமுறை சிக்கலானது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், குறித்த வழிமுறையை இலகுவாக்குவதற்காக எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2518/2026

கௌரவ சுரங்க ரத்நாயக்க,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹொரவபொத்தானை வைத்தியசாலையானது ஒரு 'B' தர வைத்தியசாலை என்பதையும்;

(ii) இது இப்பிரதேச மக்களுக்குச் சேவையாற்றும் பிரதான வைத்தியசாலையாக விளங்குவதுடன், தினசரி பெருமளவிலான நோயாளர்கள் வெளிநோயாளர்களாகவும் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்காகவும் வருகை தருகின்றனர் என்பதையும்;

(iii) குறித்த வைத்தியசாலையில் போதுமான சிறுவர் சிகிச்சை மற்றும் சிறுவர் விடுதி வசதிகள் இல்லை என்பதையும்;

(iv) அவ்வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர்களுக்குப் போதுமான உத்தியோகபூர்வ இல்ல வசதிகள் இல்லை என்பதையும்;

(v) இதன் காரணமாக வைத்தியர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பொதுமக்களின் சுகாதாரத் தேவைகளைக் கருத்திற்கொண்டு, குறித்த வைத்தியசாலையைத் தரமுயர்த்துவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தி உள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதற்கென எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அந்த வைத்தியசாலை தரமுயர்த்தப்படுமாயின், அந்தத் தரத்திற்குரிய வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், குறித்த அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் கால வரம்பு யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2572/2026

கௌரவ (கலாநிதி) வீ.எஸ். இராதாகிருஷ்ணன்,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெருந்தோட்டப் பிரதேசங்களில் புதிய மின் இணைப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கோ அல்லது மின் கணக்குகளில் பெயர்களை மாற்றுவதற்கோ தோட்ட அதிகாரியின் விதந்துரையைப் பெற வேண்டியுள்ளது என்பதையும்;

(ii) மின் இணைப்புகளைப் பெறுவதற்காக பெருந்தோட்டக் காணிகளில் மின்கம்பங்களை நடுவதற்கு தேவைப்படும் சந்தர்ப்பங்களில் தோட்ட உரிமையாளர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர் என்பதையும்;

(iii) பெருந்தோட்டங்களுக்கு வெளியேயுள்ள பிரதேசங்களில் மின் இணைப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கு கிராம உத்தியோகத்தரின் விதந்துரை மாத்திரமே போதுமானது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2619/2026

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள சமய நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டு சூரிய மின் உற்பத்தி படலக் கருத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்காக நிதியுதவி வழங்கிய நாடு யாதென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்திற்காக இதுவரையில் செலவிடப்பட்டுள்ள நிதித்தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் 2026.06.30ஆந் திகதியாகும்போது வசதிகள் வழங்கப்படவிருந்த சமய நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியின் அளவு யாதென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் 2026.06.30ஆந் திகதியாகும்போது சூரிய மின் உற்பத்திப் படலக் கட்டமைப்புகளைப் பெற்றிராத சமய நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2026, டிசெம்பர் 05, சனிக்கிழமை)

2478/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட இலங்கை சதொச ஊழியர்களின் கூட்டுறவுச் சிக்கன, நலன்புரி மற்றும் கடன் வழங்கும் சங்கத்திற்குச் சொந்தமான கதிர்காமம் ஓய்வு விடுதி கருத்திட்டத்தில் முதலீடு செய்துள்ள நபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நபர்கள் இக்கருத்திட்டத்தில் முதலீடு செய்துள்ள மொத்த பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இக்கருத்திட்டத்தின் தற்போதைய பெறுமதி யாதென்பதையும்;

(iv) இக்கருத்திட்டத்தை முடிவுறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) இன்றேல், எதிர்காலத்தில் இதனை முன்னெடுப்பது தொடர்பிலான கொள்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இக்கருத்திட்டத்தில் —

(i) எம்.டீ. சந்திரலதா தயாவதி (ஊழியர் இலக்கம் 10405), எஸ்.கே.எம்.பீ. கருணாரத்ன (ஊழியர் இலக்கம் 12583), டபிள்யூ.சீ.என். அபேசேகர (ஊழியர் இலக்கம் 13529) மற்றும் கே.பீ.டீ. கந்துல நந்த (ஊழியர் இலக்கம் 11629) ஆகிய ஊழியர்கள் முதலீடு செய்துள்ள பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி முதலீடுகளைப் பாதுகாப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2026 டிசெம்பர் 07, திங்கட்கிழமை

வாய்மூல விடைக்கான வினாக்கள்

2211/2026

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு நிலுவைத் தொகை செலுத்த வேண்டியுள்ள அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) செலுத்த வேண்டியுள்ள நிலுவைத் தொகை அரச நிறுவனங்கள் வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி தொகையை அறவீடு செய்வதற்காக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2482/2026

கௌரவ அமிர்தநாதன் அடைக்கலநாதன்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள துரித நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நிலத்தடி நீர் வளங்களின் தற்போதைய நிலை குறித்து மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) எதிர்வரும் மாதங்களில் குடிநீர் மற்றும் விவசாயத்திற்கான நீர்த் தேவைகளைப் பூர்த்திச் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) வறட்சியினால் ஏற்பட்டுள்ள பயிர் மற்றும் பொருளாதார இழப்புகள் தொடர்பாக மாவட்ட மட்டத்தில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு இழப்பீடுகள் அல்லது நிதி உதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(vi) சிறு விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போரின் வாழ்வாதாரங்களைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 'எல் நினோ நிலைமை' மற்றும் எதிர்கால வறட்சி நிலைமைகளை எதிர்கொள்வதற்கான தேசியத் திட்டமொன்று அரசாங்கத்திடம் உள்ளதா என்பதையும்;

(ii) நீர்ப்பாசன அபிவிருத்தி, மழை நீர் சேகரிப்பு மற்றும் நீர் வளங்களை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள முதலீடுகள் யாவை என்பதையும்;

(iii) எதிர்கால வறட்சி நிலைமைகளுக்கு துரிதமாக பதிலளிப்பதற்காக தேசிய முன்னெச்சரிக்கை மற்றும் அவசர நடவடிக்கை பொறிமுறையொன்றை நிறுவுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2547/2026

கௌரவ நிஷாந்த பெரேரா,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் சொந்தமான மொத்த நிலப்பரப்பு ஹெக்டயரில் எவ்வளவென்பதையும்;

(ii) குறித்த நிலப்பரப்பானது பிரதேச செயலாளர் பிரிவுகள் வாரியாக வெவ்வெறாக யாதென்பதையும்;

(iii) அந்த நிலப்பரப்பில் பிணக்குகளற்ற பரப்பின் அளவு ஹெக்டயரில் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2598/2026

கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்,— கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது இயங்கிவரும் பாரிய, நடுத்தர மற்றும் சிறிய அளவிலான கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அவற்றுள் அரச மற்றும் தனியார் துறைக்குச் சொந்தமான கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி கைத்தொழிற்சாலைகளில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தற்போது இயங்கிவரும் பாரிய, நடுத்தர மற்றும் சிறிய அளவிலான கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாகாண ரீதியாகவும் யாதென்பதையும்;

(ii) மேற்படி கைத்தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் அமைந்துள்ள கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றில் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை மாவட்ட ரீதியாக யாதென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கையானது, இலங்கையின் ஒட்டுமொத்த கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை மற்றும் முழுமொத்த ஊழியர்களின் எண்ணிக்கையின் சதவீதமாக, வெவ்வேறாக யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2655/2026

கௌரவ பத்மசிரி பண்டார,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு வருடாந்தம் வைத்தியர்களும், வைத்தியசாலை உதவியாளர்களும் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்றார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், ஆட்சேர்ப்புச் செய்யப்படும் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) அரச ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்காக வருடாந்தம் மூலதன மற்றும் பராமரிப்புச் செலவுகளுக்காக ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீட்டின் அளவு யாதென்பதையும்;

(iv) ஆயுர்வேத வைத்தியசாலைகளின் வசமுள்ள நோயாளர் காவு வண்டிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) பாரம்பரிய சுதேச வைத்திய மரபுரிமையைப் பாதுகாத்தவாறு, தகைமைகளைக் கருத்திற் கொண்டு, சுதேச வைத்தியர்களுக்கு முறைசார்ந்த வகையிலும், சட்டபூர்வமான முறையிலும் தொழில்புரிவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதுடன் ஏற்புடையதாக நடைமுறைப்படுத்தப்படும் ஒழுங்குறுத்துகை கட்டமைப்பு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2026, டிசெம்பர் 07, திங்கட்கிழமை)

2502/2026

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 'வளமான நாடு – அழகான வாழ்க்கை' கொள்கைப் பிரகடனத்தில் 55ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'மயில்கள், குரங்குகள், மர அணில் போன்ற பயிர்களுக்கு சேதம் விளைவிக்கின்ற வனவிலங்குகளின் வளர்ச்சி பற்றிய சரியான கற்கையை

மேற்கொண்டு உயிரியல்சார்ந்த முறையியல்கள் ஊடாக எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தல்' என்ற முன்மொழிவானது 2026.09.01ஆம் திகதியின் போது நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் நிதி / பௌதீக முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2026 டிசெம்பர் 08, செவ்வாய்க்கிழமை

வாய்மூல விடைக்கான வினாக்கள்

37/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— வர்த்தக, வாணிப உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2018 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் —

(i) இலங்கைக்குச் சமையல் எரிவாயுவை இறக்குமதி செய்யும் நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்களின் பெயர்களும் அவற்றின் பிரதான பங்குதாரர்களின் பெயர்களும் யாவையென்பதையும்;

(iii) வருடாந்தம் இறக்குமதி செய்யப்பட்டுள்ள சமையல் எரிவாயுவின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) வருடாந்தம் சமையல் எரிவாயு இந்நாட்டுத் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்த போது அதன் விலையும், உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்யப்பட்ட விலையும் வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) வருடாந்தம் சமையல் எரிவாயுவிற்காக அறவிடப்பட்ட வரிகளின் வகைகளும் அவற்றின் தொகைகளும் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 02 நிறுவனங்களால் ஒரே அளவிலான சமையல் எரிவாயுச் சிலிண்டர்கள் வெவ்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுமாயின், அது தொடர்பாக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

143/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010ஆம் ஆண்டிலிருந்து இதுவரை நிகழ்ந்த சில குற்றச் சம்பவங்கள் காலப்போக்கில் கவனத்திற்கு உள்ளாகாமல் போகும் தன்மையைக் கொண்டுள்ளன என்பதையும்;

(ii) மேற்படி சம்பவங்கள் தொடர்பாக மீண்டும் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் எனத் தற்போதைய அரசாங்கம் அறிவித்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அடையாளங் காணப்பட்ட அவ்வாறான குற்றச் சம்பவங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் தன்மை யாதென்பதையும்;

(ii) மேற்படி சம்பவங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2353/2026

கௌரவ மயில்வாகனம் ஜெகதீஸ்வரன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வட மாகாணத்திலிருந்து ஏனைய மாகாணங்களுக்கும், ஏனைய மாகாணங்களிலிருந்து வட மாகாணத்திற்கும் இடமாற்றம் பெற்று 10 ஆண்டுகளுக்கும் கூடுதலான காலம் பணியாற்றிய போதிலும், தமது சொந்த மாகாணங்களுக்கு மீண்டும் இடமாற்றம் பெற முடியாத நிலையிலுள்ள ஆசிரியர்கள் மீது அமைச்சின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர்கள், நீண்டகாலமாக தமது குடும்பங்களிலிருந்து பிரிந்திருப்பது, அவர்களின் மனநலம், கற்பித்தல் செயல்திறன், மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் ஆகியவற்றில் ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பில் ஆய்வு ஏதேனும் நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) சேவைத் தேவைகளையும் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையையும் கவனத்திலெடுத்து, மனிதாபிமான அடிப்படையில் அத்தகைய ஆசிரியர்களுக்கு தமது சொந்த மாகாணங்களுக்கு இடமாற்றம் வழங்க விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2553/2026

கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1968ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே, அம்பாறை அரசாங்க அதிபரால் திருக்கோவில், வட்டமடு மேய்ச்சல் தரை கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரையாக ஒதுக்கப்பட்டிருந்தது என்பதையும்;

(ii) மேற்படி மேய்ச்சல் தரையை, அம்பாறை மாவட்டத்தின் மொத்தக் கால்நடைகளில் 50 சதவீதத்திற்கும் அதிகமானவை பயன்படுத்துகின்றன என்பதையும்;

(iii) மேற்படி மேய்ச்சல் தரையை கால்நடைகளுக்காகப் பயன்படுத்துவதற்கு வனப்பாதுகாப்புத் திணைக்களம் அனுமதி வழங்குவதில்லை என்பதையும்;

(iv) இந்நிலையானது கால்நடை வளர்ப்பை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள 10,000க்கும் மேற்பட்டவர்களின் வாழ்வாதாரத்தையும், நாட்டின் பால் உற்பத்தியையும் பாதிக்கின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) அக்கால்நடைகளுக்காக வழங்கப்படவுள்ள மாற்று மேய்ச்சல் தரைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு - மாதவனை மேய்ச்சல் தரைகளில் சட்டவிரோதப் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்பதையும்;

(ii) அது தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஈ) ஆமெனில், அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

2629/2026

கௌரவ (பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்ட பாடசாலைக் கட்டமைப்பில் ஆசிரியர் ஆலோசகர்களின் பற்றாக்குறை நிலவுவதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி மாவட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் ஆலோசகர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு கல்வி வலயம் மற்றும் பாட ரீதியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) இம்மாவட்டத்தில் ஆசிரியர் ஆலோசகர் வெற்றிடங்கள் ஏற்படுவதில் தாக்கம் செலுத்தியுள்ள பிரதான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள குறிப்பான நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2026, டிசெம்பர் 08, செவ்வாய்க்கிழமை)

2514/2026

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய கணக்காய்வு அலுவலக அறிக்கையொன்றின்படி, 2025ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள சனாதிபதி மாளிகைகளில் சனாதிபதி அவர்கள் தங்கியிருக்கவில்லை என்றபோதிலும், அத்தகைய பல மாளிகைகளில் வேறு நபர்கள் 3,089பேர் தங்கியிருந்துள்ளனர் என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், அவ்வாறு தங்கியிருந்தவர்கள் யாவர்;

(iii) சனாதிபதி அவர்களால் பயன்படுத்தப்படாத மேற்படி மாளிகைகளில், 2025ஆம் ஆண்டில் மின்சாரம், தொலைபேசி மற்றும் ஏனைய பயன்பாட்டு வசதிகளுக்காக அண்ணளவாக 33.5 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், மேற்படி செலவீனங்களுக்கான காரணங்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கதிர்காமம், மஹியங்கனை மற்றும் பெந்தோட்டை ஆகிய இடங்களில் அமைந்துள்ள சனாதிபதி மாளிகைகள் எந்தவிதமான கூட்டங்களுக்கும் அல்லது தங்குவதற்கும் பயன்படுத்தப்படாதுள்ள போதிலும், அவற்றின் பராமரிப்பிற்காக ஏறக்குறைய 2.5 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை;

(iii) கொழும்புக் கோட்டை, கண்டி ஆகிய இடங்களில் அமைந்துள்ள சனாதிபதி மாளிகைகளைத் தவிர, ஏனைய சனாதிபதி மாளிகைகளை பொருளாதார ரீதியாக பயனுறுதிவாய்ந்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்த அரசாங்கம் திட்டமிடுகின்றதா;

(iv) ஆமெனில், மேற்படி செயன்முறையை எக்காலக்கட்டத்தில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2026 டிசெம்பர் 09, புதன்கிழமை

வாய்மூல விடைக்கான வினாக்கள்

727/2025

கௌரவ ரோஹண பண்டார,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீ லங்கா ஸ்டேட் டிரேடிங் (ஜெனரல்) கோப்பரேஷன் லிமிடட்டின் நெல் கையிருப்பை களஞ்சியப்படுத்துவதற்காக பிலிப்பைன்ஸிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நடமாடும் களஞ்சியசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி களஞ்சியசாலைகளுக்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) அரச நிறுவனங்களுக்கு மேற்படி களஞ்சியசாலைகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளமையை அவர் அறிவாரா என்பதையும்;

(iv) அவ்வாறு இலவசமாக வழங்க செல்வாக்கு செலுத்திய காரணிகள் யாவையென்பதையும்;

(v) நடமாடும் களஞ்சியசாலைகள் ஊடாக உச்சப் பயன்பாட்டை பெற்றுக் கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

992/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் மில்கோ (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட பால்மா மற்றும் யோகட்களின் அளவு ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியினுள் அந்நிறுவனத்தின் வருடாந்த இலாபம் / நட்டம் யாதென்பதையும்;

(iii) தற்பொழுது மேற்படி நிறுவனத்தின் தலைமை அலுவலகம் இயங்குகின்ற இடத்தின் முகவரி யாதென்பதையும்;

(iv) மேற்படி கட்டிடத்திற்கு மாதாந்தம் மற்றும் வருடாந்தம் செலுத்தும் வாடகை எவ்வளவு என்பதையும்;

(v) தலைமை அலுவலகத்தை அரச கட்டிடமொன்றுக்கு இடமாற்றம் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2047/2026

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— புத்தசாசன,சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வர்த்தமானி அறிவித்தல்கள் மூலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தொல்பொருள் பாதுகாப்பு இடங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு இடம் தொடர்பாகவும் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல்களின் இலக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி இடங்களைப் பேணுவதற்கும் பாதுகாப்பதற்கும் அரசாங்கமும் தொல்பொருள் திணைக்களமும் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று தெற்கு (கிரான்) பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நெலுகல (நெல்கல் மலை) என்பது தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இடம் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அப்பிரதேசத்தில் புதிய கட்டடங்களைக் நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்கிய அதிகாரசபை அல்லது நிறுவனம் யாது என்பதையும்;

(iii) மண்முனை தென்மேற்கு (பட்டிப்பளை) பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தாந்தாமலை முருகன் ஆலயத்தின் அபிவிருத்திப் பணிகளைத் தொல்பொருள் திணைக்களம் தடுத்து நிறுத்தியமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2402/2026

கௌரவ திலிண சமரகோன்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான சுற்றுலா ஓய்வு விடுதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) கலா வாவி அணைக்கட்டின் மீது அதிகாரசபைக்குச் சொந்தமான சுற்றுலா ஓய்வு விடுதியொன்று உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அது தற்போது செயற்பட்டு வருகின்றதா என்பதையும்;

(iv) மேற்படி ஓய்வு விடுதியில் தற்போது பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டு காலப்பகுதியில் —

(i) மேற்படி ஓய்வு விடுதியின் ஊழியர்களுக்கு சம்பளமாகச் செலுத்தப்பட்ட நிதித்தொகை யாதென்பதையும்;

(ii) விடுதியின் நீர், மின்சாரம், தொலைபேசி மற்றும் இணையக் கட்டணங்களுக்காகச் செலுத்தப்பட்ட நிதித்தொகை யாதென்பதையும்;

(iii) தங்கியிருந்த நபர்களுக்காக செலவிடப்பட்ட மொத்தச் செலவுத்தொகை யாதென்பதையும்;

(iv) நிறுவன நடவடிக்கைகளுக்காக அதன் அறைகள் அல்லது முழு வளாகமும் பயன்படுத்தப்பட்ட நாட்களின் எண்ணிக்கை மற்றும் அதன் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் யாதென்பதையும்;

(v) வெளிநபர்கள், நிறுவனங்கள் அல்லது அமைப்புகளினால் அறைகள் அல்லது முழு வளாகமும் பயன்படுத்தப்பட்ட நாட்களின் எண்ணிக்கை மற்றும் அதன் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் யாதென்பதையும்;

(vi) மேற்படி ஓய்வு விடுதியின் பராமரிப்பு மற்றும் நிர்மாணப் பணிகளுக்காகச் செலவிடப்பட்ட தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில், வெளிநபர்கள், நிறுவனங்கள் அல்லது அமைப்புகளினால் மேற்படி சுற்றுலா ஓய்வு விடுதி பயன்படுத்தப்பட்ட நிறுவன நடவடிக்கைகள் அல்லது வேறு ஏதேனும் நடவடிக்கைகள் யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2510/2026

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ,— மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தனியார் துறையின் பெரும்பாலான சிறுவர் பகல்நேரப் பராமரிப்பு நிலையங்களில் சிறுவர்களின் பாதுகாப்பு, போஷாக்கு மற்றும் உளவியல் அபிவிருத்திக்குத் தேவையான ஆகக்குறைந்த வசதிகள் கூட இல்லை என்பதையும்;

(ii) பணியாட்டொகுதியினரின் தகைமைகள் தொடர்பில் பரிசோதனை செய்வதற்கான முறையியலொன்று இல்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கையில் தற்போது இயங்கிவரும் முன்பள்ளிகள் மற்றும் பகல்நேரப் பராமரிப்பு நிலையங்களை தேசிய தரநிலைகளுக்கு அமைவாகப் பதிவு செய்வதற்கும் மேற்பார்வை செய்வதற்குமான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(ii) அனைத்து முன்பள்ளிகளையும் பகல்நேரப் பராமரிப்பு நிலையங்களையும் கட்டாயமாகப் பதிவு செய்தல், சிறுவர்களைப் பராமரிக்கும் பணியாட்டொகுதியினருக்குச் சிறுவர் பாதுகாப்பு மற்றும் முதலுதவி தொடர்பான விசேட பயிற்சிகளை வழங்குதல், அத்துடன் அந்நிறுவனங்களின் தரநிலைகளைப் பரிசோதிப்பதற்காக பிரதேச செயலக மட்டத்தில் சுயாதீன மேற்பார்வைக் குழுக்களை நியமித்தல் ஆகியவை தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2026, டிசெம்பர் 09, புதன்கிழமை)

2530/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டில் இருந்து இற்றை வரையில் —

(i) அரசாங்க ஊழியர்களினதும், பரந்த அரச துறை ஊழியர்களினதும் மொத்த எண்ணிக்கையினைப் பால்நிலை ரீதியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) தொழிலாளர் / சிற்றூழியர், இலிகிதர், தொழில்நுட்ப / தொழில்முறை மற்றும் நிறைவேற்று / முகாமைத்துவத் தரங்களில் வகைப்படுத்தப்பட்டோரின் வருடாந்த ரீதியான எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) சம்பளங்கள், ஊதியங்கள், கொடுப்பனவுகள், மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் ஏனைய தொழிற் செலவுகளுக்கான வருடாந்த செலவினம் மற்றும் ஊழியர் ஒருவருக்கான சராசரிச் செலவினம் ஆகியவற்றை ஊழியர் வகை அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) அரச துறை வேலைவாய்ப்பிலும் ஊதியப் பட்டியலிலும் ஏற்பட்ட வருடாந்த மாற்றங்கள் எவை என்பதையும்;

(v) அரச துறை ஊழியர்கள், தொழில் செய்யும் மக்களினதும் ஊழியப் படையினதும் எவ்வளவு சதவிகிதமாக உள்ளனர் என்பதையும்;

(vi) அரச துறை ஊதியப் பட்டியலானது, மீண்டெழும் செலவினம், அரசாங்க வருவாய் மற்றும் மொத்தத் தேசிய உற்பத்தி என்பவற்றின் எவ்வளவு சதவீதமாக உள்ளது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உற்பத்தித் திறன், தனியார் துறைக்கு ஊழியர் கிடைக்கக்கூடிய தன்மை, அரச நிதிகள், மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றில் அரச துறையின் தாக்கத்தினை அரசாங்கம் மதிப்பிட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதையொட்டி முன்மொழியப்பட்ட மறுசீராக்கல்கள் எவை என்பதையும்;

அவர் அறியத்தருவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2026 டிசெம்பர் 10, வியாழக்கிழமை

வாய்மூல விடைக்கான வினாக்கள்

372/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஒரே தடவையில் முழு நாட்டையும் சேதனப் பசளை விவசாயத்தில் ஈடுபடுத்துவது தொடர்பான கொள்கையை நடைமுறைப்படுத்துமாறு அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கிய உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்கள் வகித்த பதவிகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கொள்கையை நடைமுறைப்படுத்தியதன் காரணமாக நாட்டிற்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பாக பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனவா என்பதையும்;

(iii) அவ்வுத்தியோகத்தர்களுக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களிடமிருந்து நட்டஈட்டை அறவிட்டுக் கொள்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

476/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாட்டின் மொத்த குடிநீர்த் தேவைப்பாடு, கடந்த 05 ஆண்டுகளுக்கான வருடாந்தப் பயன்பாடு மற்றும் அடுத்த 10 ஆண்டுகளுக்கான உத்தேச தேவைப்பாடு ஆகியவை வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) நீர் வழங்கலுக்காகப் பயன்படுத்தப்படும் நீர்த்தேக்கங்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) ஒவ்வொரு நீர்த்தேக்கத்திலிருந்தும் வழங்கப்படும் நீரின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) நீர் வழங்கலில் ஏற்படும் ஏதேனும் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) கடந்த 05 ஆண்டுகளாக இற்றைவரை லீற்றர் ஒன்றுக்கான உற்பத்திச் செலவு, லீற்றர் ஒன்றுக்கான விற்பனை விலை மற்றும் லீற்றர் ஒன்றுக்கான விற்பனைப் பெறுமதியின் மீதான வரிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(vi) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vii) சபையின் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளுக்கான மொத்தச் செலவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நாட்டில் ஏதேனும் கடல்நீரை நன்னீராக்கும் நிலையங்கள் இயங்குகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய நிலையங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அத்தகைய ஒவ்வொரு நிலையத்திலுமிருந்து லீற்றர் ஒன்றுக்கான உற்பத்திச் செலவு வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

711/2025

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு ஈட்டியுள்ள முதலீட்டு வருமானத்தின் பெறுமதி ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி வருமானம் ஈட்டப்பட்டுள்ள முதலீட்டு மூலங்கள் யாவை;

(iii) மேற்படி முதலீட்டு வருமானங்களின் பெறுமதியின் மீது செலுத்த வேண்டியுள்ள வரித் தொகை யாது;

(iv) மேற்படி தொகையில் இதுவரை செலுத்தப்பட்டுள்ள வரித்தொகையும், செலுத்த வேண்டியுள்ள வரித் தொகையும் வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1048/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் களஞ்சியத் தொகுதி நிறுவனத்தில் SAP கணினிக் கட்டமைப்பு நிறுவப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட தொகை யாதென்பதையும்;

(iii) மேற்படி கணினிக் கட்டமைப்பில் தரவுக் காப்புப் பிரதி முறைமை (Data Backup) நிறுவப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) அதற்காக செலவிடப்பட்ட தொகை யாதென்பதையும்;

(v) 2010 ஆம் ஆண்டு முதல் இதுவரை கணினிக் கட்டமைப்புகள் நிறுவப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கையும், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதற்காக செலவிடப்பட்ட தொகையும் வெவ்வேறாக யாதென்பதையும்;

(vi) மேற்படி காலப்பகுதியில், ஒவ்வொரு பெறுகை நடைமுறையின் போதும் பெறுகைகளை சமர்ப்பித்த நிறுவனங்கள் / நபர்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) SAP கணினிக் கட்டமைப்பின் தற்போதைய செயற்பாட்டு நிலைமை யாதென்பதையும்;

(ii) இந்நிறுவனம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தடயவியல் கணக்காய்வு அறிக்கையை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1801/2025

கௌரவ சாமர சம்பத் தசநாயக்க,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்ட செயலகத்தில் 'திட்டமிடல் பணிப்பாளர்' பதவி வெற்றிடமாக இருந்ததா;

(ii) தற்போது அப்பதவி வெற்றிடத்திற்கான நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், மேற்படி நியமனத்தை மேற்கொள்கையில் உரிய ஆட்சேர்ப்பு நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா;

(iv) அவ்வாறு நியமிக்கப்பட்டுள்ள திட்டமிடல் பணிப்பாளரின் சேவைக்காலம் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2026, டிசெம்பர் 10, வியாழக்கிழமை)

2531/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை கம்பனிப் பதிவாளரிடம் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) தற்போது தொழிற்படும் கம்பனிகள் மற்றும் தொழிற்படாத கம்பனிகள் என்ற வகையில் வகைப்படுத்தப்பட்டுள்ள கம்பனிகளின் எண்ணிக்கையை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) கம்பனியொன்றைத் தொழிற்படாததாக வகைப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் அளவுகோல்கள் எவை என்பதையும்;

(ஆ) கடந்த 10 ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டுக்கும் —

(i) கலைப்பு, முடக்கம் , வங்குறோத்து அல்லது ஏனைய முறைசார்ந்த முடிவுறுத்துகை நடவடிக்கைகளுக்கு உட்பபட்ட கம்பனிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இத்தகைய நடவடிக்கைகள் குறித்து கம்பனிப் பதிவாளருக்கு அறிவித்த கம்பனிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(இ) (i) தற்போது கம்பனியொன்றைக் கூட்டிணைப்பதற்கு எடுக்கும் சராசரி மற்றும் அதிகூடிய காலம் எவ்வளவு என்பதையும்;

(ii) வேண்டப்படும் ஆண்டு விபரத்திரட்டுக்களைச் சமர்ப்பித்த, சமர்ப்பிக்கத் தவறிய மற்றும் நிலுவையில் வைத்துள்ள பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தமது ஆண்டு விபரத்திரட்டுக்களைத் தொடர்ந்து சமர்ப்பிக்கத் தவறும் கம்பனிகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட அல்லது முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2026 டிசெம்பர் 11, வெள்ளிக்கிழமை

வாய்மூல விடைக்கான வினாக்கள்

1042/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை கல்வி நிர்வாகச் சேவை உத்தியோகத்தர்களுக்குத் தாம் கடமையாற்றும் பாடசாலைக்கோ, வேறு அரசாங்கப் பாடசாலைக்கோ தமது பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு இதற்கு முன்னர் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்ததை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி வசதியானது தற்போதைய அரசாங்கத்தினால் சுற்றறிக்கை அல்லது வேறு ஏதேனும் சட்டபூர்வ நடவடிக்கையூடாக நீக்கப்பட்டுள்ளதா அல்லது திருத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) குறித்த வசதியை மீண்டும் வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1357/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நகர அபிவிருத்தி அதிகாரசபை தாபிக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(ii) அவ்வதிகாரசபையினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைமுறைப் படுத்தப்படுகின்ற அபிவிருத்திக் கருத்திட்டம் ஒவ்வொன்றினதும் பெயர் மற்றும் அதன் அமைவிடம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) அந்தத் கருத்திட்டங்களில் மட்டக்களப்பு மாநகர சபை, காத்தான்குடி மற்றும் ஏறாவூர் நகர சபைகளின் எல்லைகளுக்குள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டம் ஒவ்வொன்றும் ஆரம்பிக்கப்பட்ட திகதி, கருத்திட்டத்தின் தன்மை, கருத்திட்டத்தின் நோக்கம், செலவிடப்பட்டுள்ள தொகை மற்றும் கருத்திட்டத்தின் தற்போதைய நிலைமை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) மேற்படி (iii)இல் குறிப்பிட்டுள்ள பிரதேசங்களில் 2026ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(v) அந்தக் கருத்திட்டங்களுக்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இள்றேல், ஏன்?

1384/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அக்குரணை நகரம் சிறு வெள்ள நிலைமையிலும் நீரில் மூழ்குவதையும்;

(ii) இதன் காரணமாக அக்குரணை பிரதேச மக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி இருப்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2015ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை, அக்குரணை நகரில் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அதற்கென செலவிட்டுள்ள நிதித் தொகை யாதென்பதையும்;

(ii) அந்த நகரம் நீரில் மூழ்குவதில் தாக்கம் செலுத்தியுள்ள காரணிகள் யாவை என்பதையும்;

(iii) அந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வினை வழங்க எடுக்கப்படவுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1982/2026

கௌரவ லால் பிரேமநாத்,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில், பஸ்கொட பிரதேச செயலகப் பிரிவில், தம்பஹல மேற்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள ஊருபொக்க ஹீகொட வைத்தியசாலைக்கு அருகாமையில் அமைச்சுக்கு உரித்தான சுமார் இரண்டு ஏக்கர் காணி காணப்படுகின்றது என்பதையும்;

(ii) கம்சபா நீதிமன்ற முறை ஒழிக்கப்பட்டதன் பின்னர், மேற்படி காணி பயன்படுத்தப்படாமல் உள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி காணியை பிரதேச செயலாளரிடம் அல்லது வேறொரு அரச நிறுவனத்திடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், மேற்படி காணியை பொதுப் பயன்பாட்டிற்காகவோ, ஊருபொக்க ஹீகொட வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகளுக்காகவோ பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) மேற்படி காணியின் தற்போதைய சட்ட நிலைமை மற்றும் எதிர்பார்க்கப்படும் பயன்பாடு குறித்த அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2569/2026

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுர மாவட்டத்தில் இதுவரையில் அடையாளங்காணப்பட்டுள்ள வனசீவராசிகள் வலயங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வனசீவராசிகள் வலயங்களுக்குச் சொந்தமான நிலப்பரப்பின் அளவு, ஒவ்வோர் வலயத்தின் பிரகாரம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி வலயங்களுள் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள வலயங்கள் யாவை என்பதையும்;

(iv) சரணாலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலப்பிரதேசங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மாவட்டத்திலுள்ள உத்தேச யானை வழித்தடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இதுவரையில் வர்த்தமானி அறிவித்தல் ஊடாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள யானை வழித்தடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2026, டிசெம்பர் 11, வெள்ளிக்கிழமை)

2532/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உள்ள ஐஸ்கிரீம் மற்றும் உறைந்த இனிப்புப் பண்ட உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை, அவர்களின் வருடாந்த உற்பத்தி, வேலைவாய்ப்பு மற்றும் ஏற்றுமதிகள் ஆகியவற்றை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) வெளிநாட்டுக்குச் சொந்தமான / உரிமம் பெற்ற ஐஸ்கிரீம் மற்றும் மென் ஐஸ்கிரீம் விற்பனை நிலையங்கள் மற்றும் கியோஸ்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு வர்த்தக நாமத்தின் கீழும் இயங்கும் நிலையங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) அத்தகைய தொழிற்பாட்டாளர்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவுசெய்து, பொருத்தமான சந்தர்ப்பங்களில் வரி செலுத்துநர் அடையாள இலக்கம், பெறுமதி சேர் வரி மற்றும் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி ஆகியவற்றைப் பெற்றுக்கொள்வது அவசியமா என்பதையும்;

(iv) இறக்குமதி செய்யப்பட்ட தயாரிக்கப்பட்ட ஐஸ்கிரீம் தயாரிப்புகள், முன்கலவைகள் மற்றும் மூலப்பொருட்களின் அளவுகள் மற்றும் பெறுமதிகள், மற்றும் அவற்றுக்குப் பொருந்தக்கூடிய இறக்குமதி வரிகள், வரிச் சலுகைகள் மற்றும் ஏனைய ஊக்குவிப்புச் சலுகைகள் ஆகியவற்றைத் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(v) உள்ளூர் உற்பத்தியாளர்கள், வேலைவாய்ப்பு, பால் பண்ணையாளர்கள் பெறுமதி சேர்ப்பு மற்றும் ஏற்றுமதி என்பவற்றின் மீதான வெளிநாட்டு உரிமம் பெற்ற வர்த்தகத்தின் தாக்கம், மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், உள்ளூர் உற்பதியைப் பாதுகாப்பதற்கும் ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்கும் எடுக்கப்பட்ட / முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2026 டிசெம்பர் 12, சனிக்கிழமை

வாய்மூல விடைக்கான வினாக்கள்

1006/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் தெஹிவளை பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவுக் கிராமிய வங்கியினால் வழங்கப்பட்டுள்ள கடன் தொகை ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி கடன்களைப் பெற்றுக் கொண்ட நபர்களின் பெயர்கள் மற்றும் கடன் தொகைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி கடன்களில் இதுவரையில் அறவிடப்பட்டுள்ள மற்றும் அறவிடப்படாத பணத்தொகைகள் எவ்வளவென்பதையும்;

(iv) அறவிடப்படாத கடன்களை அறவிட்டுக்கொள்வதற்காக மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(v) இன்றளவில் அவ்வங்கி வங்குரோத்துநிலைக்கு உள்ளாகியுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அங்கு பணிபுரியும் சம்பளம் பெறும் ஊழியர்களின் பெயர்கள், பதவிகள் மற்றும் சம்பள அளவுகள் யாவை என்பதையும்;

(vii) வங்கியானது வங்குரோத்துநிலைக்கு உள்ளாகியதன் காரணமாக வைப்பாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளைக் குறைப்பதற்கும், அவர்களின் வைப்புகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1324/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க நிறுவனங்களிலும் பாடசாலைகளிலும் நூலகர் பதவிகளும் அதனுடன் தொடர்புடைய பதவிகளும் தொடர்ந்து வெற்றிடமாக உள்ளன என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அவற்றினை நிரப்பாமைக்கான காரணங்கள் எவையென்பதையும்;

(iii) அந்தப் பதவிகளை நிரப்புவதற்கான திட்டங்கள் அல்லது கால வரம்பு எவையென்பதையும்;

(iv) பொருத்தமான நபர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அல்லது பதவியுயர்த்துவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதையும்;

(v) நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் உயர் டிப்ளோமா தகுதியுடன் தொடர்ந்து வேலையற்றிருப்போரின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) அவர்களை நூலகர்களாக, சுவடிக்காப்பாளர்களாக, அல்லது தகவல் உத்தியோகத்தர்களாக நியமிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(vii) இவர்களுக்குப் பயிற்சி அல்லது தற்காலிக நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(viii) கடந்த 05 வருடங்களாகத் தொடர்ந்து வேலையற்றிருந்த நபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ix) இவ்வாறான நபர்களில், அரசாங்கத்தில் அல்லது தனியார் துறையில் தொழில் பெற்றுள்ளோரின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(x) இவர்களுக்கு நிரந்தரத் தொழில் வழங்குவதற்காக ஏதாவது திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1414/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020ஆம் ஆண்டு முதல் இதுவரையான காலப்பகுதியில் இலங்கைக்கு மாசிக் கருவாடு மற்றும் கருவாடு ஆகியவற்றை இறக்குமதி செய்திருப்பின், அவற்றுக்காக ஒவ்வோர் ஆண்டும் செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்;

(ii) அக்காலப்பகுதியில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மாசிக் கருவாடு மற்றும் கருவாடு ஆகியவற்றின் அளவு ஆண்டுவாரியாக யாதென்பதையும்;

(iii) இந்நாட்டில் மாசிக் கருவாடு மற்றும் கருவாடு உற்பத்தியை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1842/2026

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாண பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்ட கல்விசார ஊழியர் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1537/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜெயவர்தன,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாநகரசபையில் நடைமுறைப்படுத்தப்பட்ட 'ஸ்மார்ட் வீதி விளக்கு' கருத்திட்டத்தின் நோக்கங்கள் யாவை;

(ii) மேற்படி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்திய நிறுவனம் யாது;

(iii) மேற்படி கருத்திட்டத்தினால் கொழும்பு மாநகரசபைக்கு ஏற்பட்டுள்ள நிதிசார் நட்டம் எவ்வளவு;

(iv) இது தொடர்பாக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2026, டிசெம்பர் 12, சனிக்கிழமை)

2562/2026

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 'வளமான நாடு – அழகான வாழ்க்கை' கொள்கைப் பிரகடனத்தின் 56 ஆம் பக்கத்தில் யானைகளுக்கும் மனிதனுக்கும் இடையிலான மோதல்களை கட்டுப்படுத்துவதற்காக யானைகளின் எண்ணிக்கை, நடமாடும் பாங்குகள் மற்றும் வாழிடங்கள் பற்றிய முறையான கற்கையை மேற்கொண்டு விஞ்ஞான ரீதியான மற்றும் நவீன தொழில்நுட்பப் பொறிமுறைகளைப் பயன்படுத்தி மக்கள் பங்கேற்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குதல் என்ற முன்மொழிவானது 2026.09.01ஆம் திகதியின் போது நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் நிதி / பௌதீக முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2026 டிசெம்பர் 14, திங்கட்கிழமை
வாய்மூல விடைக்கான வினாக்கள்

1198/2025

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யா/நெடுந்தீவு சைவப்பிரகாசா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இப் பாடசாலை எவ்வகைக்குரிய பாடசாலை என்பதையும்;

(iii) பாடசாலையின் கல்விசார் மற்றும் கல்விசாரா ஆளணிக்கு அனுமதிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கையும் தற்பொழுது பணியாற்றும் பணியாளர்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) நிலவும் வெற்றிடங்கள் இதுவரையில் பூரணப்படுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) வெற்றிடங்களைப் பூரணப்படுத்த எதிர்பார்க்கின்ற காலப்பகுதி யாதென்பதையும்;

(vi) ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக மேற்படி பாடசாலையின் கற்றல் நடவடிக்கைகளுக்கு ஏற்பட்டுள்ள தாக்கம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1665/2025

கௌரவ துரைராசா ரவிகரன்,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்டு பராமரிக்கப்படும் விளையாட்டு வளாகங்கள், அவற்றின் அளவின் அடிப்படையில் வகைப்படுத்தப்படும் விதம் யாதென்பதையும்;

(ii) அதற்கமைய மேற்படி விளையாட்டு வளாகங்கள் மூலம் வழங்கப்படும் பயிற்சிகள் யாவையென்பதையும்;

(iii) நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள தேசிய, மாகாண மற்றும் மாவட்ட மட்டத்திலான அரசாங்க விளையாட்டு வளாகங்கள் மற்றும் அவை அமைந்துள்ள மாவட்டங்கள் யாவையென்பதையும்;

(iv) தற்போது எந்தவொரு விளையாட்டு வளாகங்கள் இல்லாத மாவட்டங்கள் இருப்பின், அவை யாவையென்பதையும்;

(v) ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தபட்சம் ஒரு விளையாட்டு வளாகமேனும் தாபிக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அதனை நடைமுறைப்படுத்துவதற்குரிய உத்தேசக் காலச்சட்டகம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1687/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிண்ணியா நகர சபையினால் பராமரிக்கப்படுகின்ற விளையாட்டு மைதானங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி விளையாட்டு மைதானங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கிண்ணியா நகர சபையினால் பராமரிக்கப்படுகின்ற 'எழிலரங்கு விளையாட்டு மைதானத்தை' அபிவிருத்தி செய்வதற்கு 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2025 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள வருடங்கள், குறித்த ஒதுக்கீடுகளின் அளவு மற்றும் ஒதுக்கீடுகளால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி விளையாட்டரங்கினை அபிவிருத்தி செய்வதற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் பொது விலைமனுக் கோரல் இன்றி அபிவிருத்தி நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) விளையாட்டரங்கின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்ட ஒப்பந்ததாரர் யாரென்பதையும்;

(iii) ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி முறையாகப் பயன்படுத்தப்பட்டு விளையாட்டரங்கும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) விளையாட்டரங்கத்தை அபிவிருத்தி செய்வதில் நடைபெற்றதாகக் கூறப்படும் ஊழல் மற்றும் முறைகேடுகள் தொடர்பாக விசாரணையொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், மேற்படி விசாரணை தொடர்பான தகவல்கள் முன்வைக்கப்படுமா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1966/2026

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) முள்ளந்தண்டுப் பாதிப்புக்குள்ளாகுதல் அல்லது ஏனைய காரணங்களினால் படுக்கையில் முடங்கியுள்ள நபர்களின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அத்தகைய நபர்களைப் பராமரிப்பதற்காகத் தற்போதுள்ள அரசாங்க நிறுவனங்கள், கட்டணம் அறவிடும் தனியார் நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளை நிறுவனங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வகுதியின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அத்தகைய நிறுவனங்கள் அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(iii) அத்தகைய நிறுவனங்கள் மூலம் பராமரிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அரசாங்கத்திற்குச் சொந்தமான இவ்வாறான நிறுவனங்களைப் பராமரிப்பதற்காக வருடாந்தம் செலவிடப்படும் தொகை யாதென்பதையும்;

(v) மேற்படி நபர்களைப் பராமரிக்கும் அறக்கட்டளை நிறுவனங்களுக்கு அரசாங்கத்தினால் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படுகிறதா என்பதையும்;

(vi) ஆமெனில், மேற்படி தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தங்கள் வீடுகளில் உள்ள மற்றும் உறவினர்களால் பராமரிக்கப்பட்டு வரும் படுக்கையில் முடங்கியுள்ள நபர்கள் மற்றும் சக்கர நாற்காலிகளைப் பயன்படுத்தும் குறைந்த வருமானம் பெறும் நபர்களுக்குத் தேவையான மலசலகூடங்களை நிர்மாணிப்பதற்கு அரசாங்கத்தினால் உதவித்தொகைகள் வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வுதவித் தொகையின் அளவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2574/2026

கௌரவ சுகத் வசந்த த சில்வா,— போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2025.09.18ஆம் திகதி அனுராதபுரம் மேல்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்கமைய, இயலாமையுள்ள நபர்களுக்கான அணுகல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக மஹவ தொடக்கம் வவுனியா வரையான சகல புகையிரத நிலையங்களையும் நவீனமயப்படுத்தும் கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) 'கிளீன் ஸ்ரீ லங்கா நிகழ்ச்சித்திட்டத்தின்' கீழ் 100 புகையிரத நிலையங்களை நவீனமயப்படுத்துகின்ற போது இயலாமையுள்ள பயணிகளுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) கோட்டை புகையிரத நிலையத்தில் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ள நவீனமயப்படுத்தும் செயற்பாடுகளின் போது இயலாமையுள்ள நபர்களுக்கு அவசியமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பிரதான புகையிரத நிலையங்களில் சக்கர நாற்காலி பயன்படுத்துபவர்களால் அணுகக்கூடிய வகையில் நவீனமயப்படுத்துவதற்கு தற்போதைய அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் குறிப்பிட்ட திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) இயலாமையுள்ள நபர்கள் புகையிரதப் பெட்டிகளில் ஏறுவதற்கான அணுகல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) ஒரு புகையிரத மேடையிலிருந்து மற்றுமொரு புகையிரத மேடைக்கு மாறிச் செல்கின்ற போது அவசியமாகும் அணுகல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2026, டிசெம்பர் 14, திங்கட்கிழமை)

2563/2026

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 'வளமான நாடு – அழகான வாழ்க்கை' கொள்கைப் பிரகடனத்தின் 36 ஆம் பக்கத்தில் 'விளையாட்டு வசதிகள் தொடர்பிலான தேசிய தரவுக் களஞ்சியம்' என்ற முன்மொழிவானது 2026.09.01ஆம் திகதியின் போது நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் நிதி / பௌதீக முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2027 ஜனவரி 08, வெள்ளிக்கிழமை

பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 5/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தேன் கைத்தொழிலை மேம்படுத்தல்,— மிகத் தரமான மருத்துவ குணமிக்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள தேன் கைத்தொழிலை உள்நாட்டில் மேம்படுத்துவதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 6/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடித்தல்,— இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு அதிகூடிய வருமானத்தை ஈட்டித்தருகின்ற புகையிரதப் பாதையாக களனிவெளி புகையிரதப் பாதை கருதப்படுவதாலும், இப் புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதனால் இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, பதுளை உள்ளிட்ட பல மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அதன் நன்மைகளை அனுபவிக்க முடியுமென்பதாலும், களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 8/ 2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தினை கற்றல், கற்பித்தல் செயன்முறையுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது, சுவையூட்டிகள் மற்றும் கலத்தல் கலை, சமையல் கலை, நிறமூட்டிக் கலை, உணவு வெட்டும் கலை உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டுள்ளதால், இலங்கையின் உணவுக் கலாசாரம் தொடர்பான கற்பித்தலை கற்பித்தல் செயன்முறைகள் ஊடாக எதிர்கால சந்ததிக்கு அளிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே எமது நாட்டின் உணவுக் கலாசாரத்தை விரிவுபடுத்துவதோடு இலங்கையின் அடையாளத்தை உலக அளவில் நிலைநிறுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 9/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பாடசாலைப் பிள்ளைகளின் பெறுமதியை சமூகமயப்படுத்தல்,— பாடசாலைப் பிள்ளைகள் பெரும்பாலும் தொடர்புறுவோராகிய பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வேன் சாரதிகள் போன்ற நபர்களுக்கு பிள்ளைகளின் பெறுமதி தொடர்பாக சமூகவியல் மற்றும் உளவியல் செயன்முறைகள் மூலம் எளிமையான முறையில் தெளிவுபடுத்தி நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக சமூகச் சவால்களுக்கு மத்தியில் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.10/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தோட்டப் பிரதேசங்களில் விளையாட்டுத்துறையை விருத்தி செய்தல்,— தோட்டப் பிரதேசங்களில் வாழும் இளைஞர், யுவதிகள் விளையாட்டுத் துறையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருப்பதனாலும், அவர்கள் கல்வி பயிலும் தோட்டத்துறைப் பாடசாலைகள் மற்றும் வாழும் தோட்டப் பிரதேசங்களிலும் விளையாட்டுத்துறைக்கு எந்தவொரு வசதியும் இல்லாமையினாலும், நாட்டின் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு தோட்டப் பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதேசத்திற்குரிய விளையாட்டு அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 31/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கம் தொடர்பில் ஊழியர்களுக்கு 1% வீத இலாபத்தைச் செலுத்துதல்,—அரசாங்கத் தாபனங்களினால் நிர்வகிக்கப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியன வருடாந்தப் பணவீக்க வீதத்தினை விடக் குறைந்தபட்சம் 1% அதிகமான இலாபம் ஊழியர்களுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 32/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரஜைகளுக்கு இலவசப் பயண வசதிகள் பெற்றுத்தரல்,— அனைத்து சிரேஷ்ட பிரஜைகளுக்கும் பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் இலவசப் பயண வசதிகள் வழங்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 34/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— புத்தாக்குனர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தும் தேசிய வேலைத்திட்டமொன்றை உருவாக்குதல்,— பல்வேறு திறன்களைக் கொண்ட புத்தாக்குனர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தி அவர்களின் திறன்கள் மற்றும் படைப்புகளை மேம்படுத்துவதற்கான தேசிய வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 35/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் கைத்தொழிலதிபர்களுக்கு வரிச்சலுகை,— சர்வதேச சந்தைக்கான பொருட்களை உற்பத்தி செய்வதில் 75% க்கும் அதிகமான உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் உள்நாட்டுக் கைத்தொழிலதிபர்களுக்கு இரண்டு ஆண்டுகள் வரிச் சலுகை வழங்கப்பட வேண்டும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 36/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— வாக்குரிமையை வழங்குதல்,— வாக்குரிமையை இழந்த பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதனால், பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு தனிநபரும் வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்படல் வேண்டும் என்றும், தேர்தல் இடாப்பில் பெயர் உள்ளடக்கப்பட்டதன் பின்னரும் வாக்களிக்காத நபருக்கு அபராதம் விதிக்கப்பட வேண்டும் என்றும், இம்முறையானது அதிக பங்கேற்புமிக்க ஜனநாயகச் செயன்முறையை உருவாக்க உதவும் என்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 41/2025

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் யாப்பு உள்ளிட்ட ஆக்க அமைவினை மாற்றியமைப்பதற்கான வேலைத்திட்டத்தைத் தயாரித்தல்,— சமகாலத்தில் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் சம்பந்தமாக சமூகத்தில் பாரியதொரு சொல்லாடல் உருவாகியுள்ளதாலும், நிறுவனத்தின் நிர்வாகிகள் தெரிவின் போது குறித்தவொரு சங்கத்தைச் சேர்ந்த குழுவினர் வசம் கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரம் இருப்பதால் முறைகேடுகள் அதிகளவில் இடம்பெறும் நிறுவனமாக அது மாறியுள்ளதாலும், அந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கு கிரிக்கெட் நிறுவனத்தின் யாப்பு உள்ளிட்ட ஆக்க அமைவினை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 44/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்பான 2023 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சிபாரிசுகளை அமுல்படுத்தல்,— இலங்கைப் பொருளாதாரத்தின் இதயத்தைப் போன்றுள்ள இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்பாக மிக முக்கியமான சிபாரிசுகள் தேசிய கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதனால் மேற்படி சிபாரிசுகளை அமுல்படுத்த முறையான வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 45/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் சேவைக்காக முறையாக நிதியைப் பயன்படுத்துதல்,— இன்றளவில் அனேகமான உள்ளூராட்சி நிறுவனங்கள் தமது நிதியை உரிய முறையில் செலவிட்டு பொது மக்கள், சுகாதாரம், பொதுச் சேவைகள் மற்றும் வீதி அபிவிருத்தி பணிகளையும் மேற்கொள்ளாது இலாபம் ஈட்டும் நோக்கில் நிலையான வைப்பு கணக்குகளில் வைப்பிலிடுவதாக தகவல் அறியக்கிடைத்துள்ளமையால் இந்நிலையை தடுப்பதற்கு அரசாங்கத்தினால் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்கமைப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.49/2025

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு உரிமம் அளிக்கும் செயன்முறையை ஒழுங்குபடுத்துவதற்காக வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு உரிமம் அளிக்கும் செயன்முறையானது முறையற்ற வகையில் காணப்படுவதால், அதனை முறைப்படுத்துவதற்கான ஒழுங்குபடுத்தல் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 51/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மொழிகள் பீடத்தினைத் தாபித்தல்,— ஆசிரியர்களுக்குச் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்பிப்பதற்காகத் தேசிய மொழிகள் பீடம் ஒன்று தாபிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 53/2025

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தொலைக்காட்சி நாடகக் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்கும் அக் கைத்தொழில் துறையை ஒழுங்குறுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல், — மக்களுக்கு கேளிக்கையை அளிக்கும் பிரதான கைத்தொழில் துறையாகிய தொலைக்காட்சி நாடகக் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்காகவும் மேற்படி கைத்தொழில் துறையை ஒழுங்குறுத்துவதற்காகவும் ஒழுங்குறுகை நிறுவனமொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.57/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— "இலங்கை பைத்துல்மால் நிதியம்" என்ற பெயரில் நிதியமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம் மக்களின் கல்வி, கலாசாரம், தொழில் மற்றும் இனங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் மற்றும் அன்றாட வாழ்வாதாரத்தைப் பூர்த்திசெய்யத் தேவையான ஒரு நிதியம் தற்சமயம் முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் இல்லாமையினாலும், இவ்வாறான தேவைகளுக்காக "பைத்துல்மால்" என்ற பெயரிலான நிதியம் உலகிலுள்ள முஸ்லிம் நாடுகள் மற்றும் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்கின்ற நாடுகளில் பல ஆண்டுகாலமாக இயங்கிவருவதாலும், இலங்கையில் இவ்வாறானதொரு நிதியம் ஆரம்பிக்கப்படுமானால் அதற்குத் தேவையான நிதியை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வசிப்பவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியுமென்பதாலும், முஸ்லிம் சமய, கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் "இலங்கைப் பைத்துல்மால் நிதியம்" என்ற பெயரில் நிதியமொன்றைத் தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 62/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— புகையிரதப் பண்டப் போக்குவரத்தினை வினைத்திறன்மிக்கதாக மாற்றுதல்,— இலங்கையில் புகையிரதச் சேவையானது பண்டப் போக்குவரத்தினை முக்கிய நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளமையாலும், இன்றளவில் புகையிரதச் சேவை அந்நோக்கத்திலிருந்து விலகியுள்ளமையாலும், பண்டங்களை புகையிரதத்தில் ஏற்றிச் செல்வது செலவு குறைந்த முறையாகக் காணப்படுவதனாலும், இதன் நன்மைகள் நாட்டு மக்களுக்கு நேரடியாகக் கிடைக்கப் பெறுவதனாலும், இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் புகையிரத்தின் மூலம் பண்டங்களையும், எரிபொருளையும் ஏற்றிச் செல்வதற்கு அரசாங்கம் உரிய வழிமுறையொன்றை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 63/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— தமது உற்பத்திகளை விற்பனை செய்யும்போது விவசாயிகளுக்கு இழைக்கப்படுகின்ற அநீதியை குறைத்தல்,— தமது விவசாய உற்பத்திகளை விற்பனை செய்யும்போது மொத்த மற்றும் சில்லறை வர்த்தகர்கள் மிகவும் குறைந்த விலையை நிர்ணயிப்பதால் இந்நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு பாரிய அநீதி இழைக்கப்படுவதாலும், இவ்வுற்பத்திகளை வர்த்தகர்களிடமிருந்து நுகர்வோர் கொள்வனவு செய்யும்போது கூடுதல் விலையை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாலும், ஒரே நேரத்தில் விவசாயிகளுக்கும், நுகர்வோருக்கும் அநீதி இழைக்கப்படுகின்ற இந்நடைமுறையை மாற்றியமைத்து விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் நியாயத்தை வழங்குவதற்காக அரசாங்கம் துரித நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 64/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— முன்பள்ளிக் கல்வியை ஒழுங்குறுத்தும் முறையொன்றை உருவாக்குதல்,— தற்போது இலங்கையில் அமுலில் உள்ள அனைத்து கல்வி வாய்ப்புகளிலும் முன்பள்ளிக் கல்வி மிக முக்கியமானதும், தீர்க்கமானதுமாக காணப்படுவதால், இலங்கையின் முன்பள்ளிக் கல்வியை ஒரு நிறுவனத்தினூடாக ஒழுங்குறுத்தும் முறையொன்றை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 65/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— ஏற்றுமதி உற்பத்தியாளர்களுக்கான வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்,— ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு விவசாய மற்றும் வேறு பொருட்களை உற்பத்திச் செய்கின்ற உற்பத்தியாளர்களுக்கு ஏற்றுமதிச் சந்தைக்குள் நுழைவதற்குப் போதுமானளவு வசதிகள், அறிவு மற்றும் நுழைவு வழிகள் இல்லாத காரணத்தினால், அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் பிரதான அங்கங்களாகிய ஏற்றுமதித் துறையில் ஈடுபட்டுள்ள இளம் முயற்சியாளர்களுக்கு தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 66/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— உயர்தரம் விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பவியல் பாடத் துறைகளுக்கு இலக்கியப் பாடத்தை அறிமுகப்படுத்தல்,— இலங்கையின் பாடசாலைகளில் விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பவியல் ஆகிய பாடத் துறைகளில் உயர் கல்வி கற்கும் மாணவர்களின் இலக்கிய ரசனையை மேம்படுத்துவதற்காக குறித்த துறைகளுக்கு மேலதிகப் பாடமாக இலக்கியப் பாடத்தை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 67/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சைப் பெறும் நோயாளிகளை பராமரித்தல்,— வைத்தியசாலையொன்றில் தங்கி சிகிச்சைப் பெறும் நோயாளிகளின் அருகிலிருந்து நாள்முழுவதும் அவர்களைப் பராமரிப்பதற்காக பொறுப்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டுமென விடுதிக்கு பொறுப்பான அலுவலர் தெரிவிப்பதாலும், அவ்வாறு பராமரிப்பாளர் ஒருவர் இல்லாதபோது கட்டணம் செலுத்தி பராமரிப்பாளர் ஒருவரின் சேவையைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுவதாலும், அத்தகைய பராமரிப்பாளர்கள் நாளொன்றுக்கு ரூ. 3,500 அறவிடுவதாலும், சில நாட்கள் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைப் பெறவேண்டிய நிலை ஏற்படின் அச்செலவு பெருஞ்சுமையாக இருக்கும் என்பதாலும், வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளின் பாதுகாப்பினையும் மற்றும் பராமரிப்பினையும், வைத்தியசாலையில் சேவையாற்றும் பராமரிப்பாளர்கள் ஊடாக பெற்றுக்கொடுப்பதற்கான வழிமுறை ஒன்றை அரசாங்கம் வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 68/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— காணி உரிமப் பத்திரங்களையுடையோருக்கு, நிரந்தரக் காணி அறுதி உறுதிப் பத்திரங்களை வழங்குதல்,— நாட்டு மக்களில் கணிசமானோர் தமது காணிகளுக்கு உரிமப் பத்திரங்கள் அல்லது ஸ்வர்ண பூமி போன்ற உறுதிகளையே கொண்டிருக்கின்றனர் என்பதால் அவர்களுக்குரிய உறுதிகளை வழங்குவதற்கு சரியான வழிமுறையொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 71/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— நிலைபேறான இளைஞர் வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்கு யாழ்ப்பாணத்திலும் வடமாகாணத்திலும் நிரந்தர விசேட பொருளாதார வலயம் ஒன்றினைத் தாபித்தல்,— ஒரு நிரந்தர விசேட பொருளாதார வலயமொன்றினைத் தாபித்தலானது அரசாங்கத்தின் பொருளாதார வளர்ச்சியினைத் தூண்டுவதனாலும், உள்நாடு மற்றும் வெளிநாட்டு முதலீட்டினை ஈர்ப்பதனாலும் இளைஞர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பினை உருவாக்குவதனாலும், அவ்வாறான வலயங்களினைத் தாபிப்பதன் மூலம் அரசாங்கத்தினால் தொழிற்துறை விரிவாக்கத்தினை ஊக்குவிக்கவும், திறன் விருத்தியினை மேம்படுத்தவும் மற்றும் தொழில்முனைவினை ஊக்குவிக்கவும் முடியுமென்பதாலும், இதன்மூலம் வேலைவாய்ப்பின்மையினை நிவர்த்திசெய்து யாழ்ப்பாணத்திலும் வட மாகாணத்திலும் மற்றும் ஒட்டுமொத்த நாட்டிலும் நீண்டகால சமூக-பொருளாதார முன்னேற்றத்தினை ஊக்குவிக்க முடியும் என்பதாலும், நாடு முழுவதிலும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களினை உள்ளடக்கி, யாழ்ப்பாணத்திலும் வடமாகாணத்திலும் ஒரு நிரந்தர விசேட பொருளாதார வலயம் (SEZ) தாபிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 73/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையர்களுக்குச் சுகாதாரத்திற்கான மிகச் சிறந்த வாய்ப்புகளை வழங்குதல்,— சனத்தொகையில் பெரும்பான்மையானோர் திறந்த இருதய சத்திரசிகிச்சைக்கு உட்படுகின்ற நிலையில், தனியார் துறை ஊழியர்களுக்கு 'ஊழியர் சேமலாப நிதியம்' மற்றும் 'ஊழியர் நம்பிக்கை நிதியம்' ஆகியவற்றுக்கூடாக இலவச வசதிகள் வழங்கப்படும் வகையிலும் அரசாங்க ஊழியர்களுக்கு அல்லது ஊழியரல்லாதோருக்கு அரசாங்கத்தினால் சனாதிபதி நிதியத்தில் இருந்து செலவுக்கான முழுத் தொகையும் வழங்கப்படும் வகையிலும் அனைத்து இலங்கையர்களுக்கும் சுகாதாரத்திற்கான சிறந்த வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டுமென இப்பாரளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.74/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— வாரத்தின் கடமை நாட்களில் பிரதான நகரங்களை அண்டியதாக காலை மற்றும் மாலை நேரங்களில் பேருந்து முன்னுரிமைப் பாதை முறையை துரிதமாக நடைமுறைப்படுத்தல்,— பிரதான நகரங்களை அண்டியதாக காலை மற்றும் மாலை நேரங்களில் ஏற்படும் கடுமையான போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வாக, காலை மற்றும் மாலை நேரங்களில் பேருந்து முன்னுரிமைப் பாதை முறையை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 75/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— இத்தாலி - இலங்கை இருதரப்பு சாரதி அனுமதிப்பத்திர ஒப்பந்தத்தை இற்றைப்படுத்தல்,— இத்தாலி - இலங்கை இருதரப்பு சாரதி அனுமதிப்பத்திர ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கையர்களுக்கு ஏராளமான நன்மைகள் கிடைப்பதனால், அந்த ஒப்பந்தத்தை மீண்டும் இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 76/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— சூட்டிகை வலுசக்திக் கட்டமைப்பையும் சூட்டிகை மின் மானிகளையும் அறிமுகம் செய்தல்,— ஒரு புதுப்பிக்கத்தக்க வலுசக்தி வடிவமாக சூரிய மின்சக்தி பெறப்படுவதை ஊக்குவித்தல் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றபோதும் குறிப்பாக, கூரைகளில் பொருத்தப்படுகின்ற சூரியப் படல்களால் பிறப்பிக்கப்படுகின்ற மின்சாரத்தின் அளவை முறைமைக் கட்டுப்பாட்டு நிலையத்தால் வேறுபடுத்திக் கண்டறிய முடியாததால் தேசிய மின்சாரக் கட்டமைப்பை (Grid) சூட்டிகை நிலைக்கு (Smart Grid) கொண்டு வரவும் சூட்டிகை மின் மானிகளை (Smart Meters) அறிமுகம் செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.77/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— உணவுகளை சுவையூட்டுவதற்காக பயன்படுத்தப்படும் தீங்கு விளைவிக்கும் செயற்கைச் சுவையூட்டிகளைத் தடைசெய்தல்,— இந்த நாட்டிலுள்ள உணவகங்கள் மற்றும் ஹோட்டல்களில் ரைஸ், கொத்து மற்றும் நூடில்ஸ் போன்ற உணவுகளைச் சுவையூட்டுவதற்காக பயன்படுத்தப்படும் செயற்கை சுவையூட்டிகள் பல்வேறுபட்ட தொற்றாத நோய்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றதென கூறப்படுவதால் அது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் ஊடாக முறையான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு, மேற்படி தீங்கு விளைவிக்கும் சுவையூட்டிகளைத் தடைசெய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 82/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— நிறுவனத் தலைவர்களை நியமிப்பதற்கான அளவுகோலாக பிரதான செயலாற்றுகைச் சுட்டியை பயன்படுத்துவதற்கான வழிமுறையை தயாரித்தல்,— அரசாங்கத்தின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்களை நியமிப்பதில் மூப்புரிமையை கவனத்திற்கொள்வது போன்றே அவர்களின் பிரதான செயலாற்றுகைச் சுட்டியை (KPI - Key Performance Indicator) ஒரு அளவுகோலாகப் பயன்படுத்துவதற்கான வழிமுறையொன்றை அரச சேவையில் பயன்பாட்டிற்கு கொண்டுவந்து அதற்கேற்ப நிறுவனத் தலைவர்களை நியமிப்பதற்கான பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 83/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்குப் பதவிகளை வழங்கும் போது பிரதான செயலாற்றுகைச் சுட்டியைக் கவனத்திற் கொள்ளுதல்,— பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் முக்கிய செயலாற்றுகைச் சுட்டியை (KPI -Key Performance Indicator) வருடாந்தம் மதிப்பாய்வு செய்து அவர்களுக்குப் பதவிகளை வழங்கும் போது அத்தகைய சுட்டிகளைப் கவனத்திற் கொண்டு பதவிகளை வழங்கும் முறையியலொன்றை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 84/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பிரதம நீதியரசர் முதல் நீதித்துறையின் கீழ்நிலை பதவிகள் வரை பதவி வகித்தவர்களை வேறு பதவிகளுக்கு நியமிக்கும்போது அவர்களின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாத்தல்,— பிரதம நீதியரசர் முதல் நீதித்துறையின் கீழ்நிலை பதவிகள் வரை பதவி வகித்தவர்களின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாக்கும் பொருட்டு அவர்கள் அப்பதவிகளை வகித்த காலம் நிறைவடைந்த நாளிலிருந்து குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகளுக்கு அரச சேவை, நியதிச்சட்ட சபைகள், ஆணைக்குழுக்கள், நியாய சபைகள் அல்லது வெளிநாட்டு சேவை (தூதுவர்கள் போன்ற) ஆகியவற்றின் பதவிகளுக்கு நியமிக்கப்படக்கூடாதென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 86/2025

கெரளவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— அரசியல் கட்சிகளைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளுக்குரித்தான சம்பளம், கொடுப்பனவுகள், மற்றும் வாகன அனுமதிப் பத்திரங்களை தமது கட்சியின் நிதியத்தில் வைப்பிலிடுவதை நிறுத்துதல்,— அரசியல் கட்சிகள் தமது கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள், மற்றும் வாகன அனுமதிப்பத்திரங்கள் முதலியவற்றை அத்தகைய அரசியல் கட்சிகளுக்கே மீளப் பெற்றுக்கொள்வதானது மக்கள் பிரதிநிதிகள் தங்களது சுயாதீனதன்மையை இழக்கின்றதொரு செயற்பாடாகும் என்பதாலும், இது சனநாயகத்திற்கு கடும் சவாலாக கருதப்படுவதனாலும், இவ்வாறு அரசியல் கட்சிகளினால் மக்கள் பிரதிநிதிகளின் மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வாகன அனுமதிப்பத்திரங்கள் முதலியவற்றை தமது நிதியத்தில் வைப்பிலிடுதல் கூடாதென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 87/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேகர,— போதைப் பொருட்களுக்கு அடிமையாகி உள்ளவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் புனர்வாழ்வளிக்கும் நிலையத்தைத் தாபித்தல்,— இன்றளவில் ஹெரோயின் போன்ற போதைப் பொருள் பாவனையாளர்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு காணப்படுவதாலும், போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் குறித்த ஒரு பிரதேசத்தில் மாத்திரமன்றி நாடெங்கிலும் பரந்து காணப்படுவதாலும் இவர்களின் ஊடாக இவ்விடயம் மேலும் பரவி வருவதாலும், போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நிலையங்கள் நாட்டின் ஒருசில பிரதேசங்களில் மாத்திரம் காணப்படுவதானது போதைப் பொருள் பாவனையாளர்களின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவது பாரிய பிரச்சினையாக மாறியிருப்பதாலும், அதற்கு தீர்வினை வழங்கும் பொருட்டு குறைந்தபட்சம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும், அனைத்து வசதிகளையும் கொண்ட ஒரு புனர்வாழ்வளிப்பு நிலையமேனும் அமைக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 89/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— இலங்கையின் விவசாய நிலங்களை மிகவும் பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்துதல்,— இலங்கையின் பொருளாதாரத்தின் முக்கியத்துவமிக்க ஒரு துறையாக விவசாயத் துறை காணப்படுவதனாலும், விவசாய நிலங்களில் சுமார் 40 %மாத்திரம் வருடாந்த உற்பத்தி செயன்முறைக்கு பயன்படுத்தப்படுவதனாலும், எஞ்சிய நிலங்கள் உரிய முறையில் திட்டமிடப்படாமை, நீர் வளப் பற்றாக்குறை, தொழிநுட்ப அறிவின்மை மற்றும் நவீனமயப்படுத்தப்படாமை ஆகியன காரணமாக பயன்படுத்தப் படாமையினாலும் உற்பத்திகளின் அளவு குறைவடைவதனால் வருடாந்தம் உணவுப் பொருட்களின் இறக்குமதி மீது பாரிய பணத்தொகை செலவிடப்படுவதனாலும், விவசாய உற்பத்திகளின் வளர்ச்சியை எதிர்வரும் ஒரு சில வருடங்களில் 30% இனால் அதிகரிப்பதற்கும், இதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கும், வணிக விவசாயத்தின் பரவலாக்கத்தை அதிகரிப்பதற்கும் வழிசமைக்கும் வகையில் சகல விவசாய நிலங்களையும் ஆய்வு செய்து நிலத்தின் வகை, பயிர்களுக்கு உகந்தநிலை, நீர் மற்றும் பயிர்ச்செய்கை பற்றிய தகவல்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய அடிப்படை தரவுத் தொகுப்பொன்றை அமைப்பதன் மூலம் நாட்டில் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்குமாக நிலங்களை பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 90/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— யாழ்ப்பாண மாவட்டத்தில் பெருநிலப்பரப்பினை அண்டியுள்ள தீவுகளில் வாழும் மக்களுக்கான கடற் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துதல்,— யாழ்ப்பாண மாவட்டத்தில் குறிப்பாகப் பெருநிலப்பரப்பினை அண்டியுள்ள நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு, மற்றும் அனலைதீவு ஆகிய தீவுகளில் வாழும் மக்கள் பல தசாப்தங்களாகப் போதிய கடற் போக்குவரத்து வசதிகள் கிடைக்காதவர்களாக இருப்பதாலும், அதன் விளைவாக, அவர்கள் பல மணித்தியாலங்களைக் கடற் பயணத்தில் செலவிடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுவதாலும், இவ்வாறான நிலைமையில் நோயாளிகள், கர்ப்பிணிகள், முதியவர்கள், பாடசாலைப் பணியாளர்கள், மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்கி இப்பயணத்தின் போது பல அபாயநேர்வுகளை எதிர்கொள்வதாலும் "கிராமமொன்றின் அபிவிருத்தி என்பது ஒரு தேசத்தின் அபிவிருத்தியாகும்" என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை என்பதாலும் அம்மக்களுக்களுக்காக நவீன, பாதுகாப்பான, துரிதமான மற்றும் நம்பகமான கடற் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 91/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— தலைமன்னார் — ராமேஷ்வரம் படகுச் சேவையினை ஆரம்பித்தல்,— தலைமன்னார் - ராமேஷ்வரம் படகுச் சேவையை ஆரம்பிப்பதன் மூலம் குறிப்பாக இந்தியாவில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையினை அதிகரிக்க முடியும் என்பதாலும், இதன் மூலம் பொதுமக்கள் குறைந்த செலவில் தமிழ்நாட்டுக்குப் பயணித்து, அமுலிலுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டு நியாயமான விலைகளில் அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்து அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதை இது இயலுமாக்கும் என்பதாலும் தலைமன்னாருக்கும் ராமேஷ்வரத்திற்கும் இடையிலான படகுச் சேவையினை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 95/2025

கெரளவ நலீன் பண்டார ஜயமஹ,— தனியார் பேருந்துகளுக்கு உரிமங்களை வழங்கும் நடைமுறையை ஒழுங்குமுறைப்படுத்துதல்,— மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் தனியார் பேருந்துகளுக்கு உரிமங்களை வழங்கும் பொருட்டு பின்பற்றப்படும் நடைமுறை பெருமளவு ஊழல் நிறைந்ததாக மாறியிருப்பதனால், அந்நிலைமையை தடுப்பதற்கு பொருத்தமான நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 98/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— 'சூர்யபல சங்ராமய' கருத்திட்டத்தை மேம்படுத்துதல்,— இலங்கையில் செலவு குறைந்த மற்றும் சுற்றுச்சூழல் நேயமிக்க வலுசக்தி மூலாதாரமாக சூரிய மின்சக்தி அடையாளம் காணப்பட்டுள்ளதாலும், 2016.09.06 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 'சூர்யபல சங்ராமய' (Battle for Solar Energy) கருத்திட்டத்தின் மூலமாக தற்பொழுது 2000 இற்கும் அதிகமான மெகாவொட் சூரிய மின்சக்தி தேசிய மின்சாரக் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளதாலும், மின்சார அலகொன்றிற்கான விலையைக் குறைப்பதற்கான முறையியலாகவும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான மூலோபாயத் திட்டமாகவும், 'சூர்யபல சங்ராமய' கருத்திட்டத்தை மேலும் மேம்படுத்தி பாதுகாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 99/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— 'களுத்துறை கடற்கரை வலயத்தை' விசேட பொருளாதார வலயமாக மேம்படுத்தல்,— களுத்துறை நகரத்தை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலா வலயமொன்றை அபிவிருத்தி செய்வதற்காகவும், களுகங்கையின் கழிமுகத்தையும் கடற்கரையையும் பாதுகாக்கும் உத்தியாகவும், கெலிடோ கடற்கரை மற்றும் களுகங்கையின் கழிமுகம் மாறியதன் காரணமாக புதிதாக உருவாகியுள்ள மேட்டுநிலம் உட்பட 'களுத்துறை கடற்கரை வலயத்தை' விசேட பொருளாதார வலயமாக மேம்படுத்தி அபிவிருத்தி செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 100/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— 'மில்லனிய ஏற்றுமதி செயலாக்க வலயம்' நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்தல்,— களுத்துறை மாவட்டத்தில், 'மில்லனிய ஏற்றுமதி செயலாக்க வலயத்தை' (Millaniya Export Processing Zone) நிர்மாணிப்பதற்குத் தேவையான 240 ஏக்கர் காணி ஏற்கனவே சுவீகரிக்கப்பட்டுள்ளதாலும், அக்கருத்திட்டத்திற்காக அதிவேக நெடுஞ்சாலை நுழைவு வழிகள், குழாய் நீர் மற்றும் மின்சாரத்தை வழங்குவதற்காக அரசாங்கம் இன்றளவில் சுமார் ஒரு பில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளதாலும், மேற்படி ஏற்றுமதி செயலாக்க வலயத்தை நிர்மாணிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட காணி மிகப் பொருத்தமானதென இலங்கை முதலீட்டுச் சபை இனங்கண்டுள்ளதாலும், அந்த ஏற்றுமதி செயலாக்க வலயத்தை நிர்மாணிப்பதனை அரசாங்கத்தின் முதன்மைக் கருத்திட்டமாகக் கருதி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 101/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,—ஆங்கில மொழியில் இரண்டாம் நிலைக் கல்வி வழங்குவதை மேம்படுத்தல்,— அரசியலமைப்பின் 18(3) ஆம் உறுப்புரையின் பிரகாரம், 'ஆங்கில மொழி' இலங்கையின் இணைப்பு மொழியாக (Link Language) ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாலும், சர்வதேச மொழியான 'ஆங்கில மொழி' குடிமக்களுக்கு அறிவைப் பெறுவதற்கான பிரதான மூலோபாயமாக அடையாளங் காணப்பட்டுள்ளதாலும், எந்தவொரு மொழியியல் அல்லது இனப் பாகுபாடும் இல்லாமல் ஒரு நாட்டில் வாழ்வதற்குத் தேவையான இணைப்பு மொழியாக ஆங்கில மொழியில் தேர்ச்சி பெறுவது இலங்கையின் அனைத்து குடிமக்களுக்கும் மிகவும் முக்கியமானதென்பதாலும், இலவசக் கல்வி எண்ணக்கருவின் கீழ் தோன்றிய இலங்கையின் மத்திய மகா வித்தியாலயக் கட்டமைப்பிற்குள்ளும் இன்னும் பல பாடசாலைகளிலும் ஆங்கிலத்தில் இரண்டாம் நிலைக் கல்வியை வழங்கும் முறையியல் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டு வருவதாலும், இலங்கைக் குடிமக்கள் சர்வதேச வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு ஆங்கில மொழி மூலமாகக் கல்வி கற்பது மிகவும் முக்கியமானது என்பதாலும், இலங்கையிலுள்ள அனைத்து இரண்டாம் நிலைப் பாடசாலைகளிலும் (Secondary Schools), 'ஆங்கில மொழி' மூலம் (English Medium) கல்வியை வழங்க வேண்டுமெனவும் அதற்கெனப் போதுமானளவு முதலீட்டைச் செய்வதற்கு அரசாங்கம் முன்னுரிமையளிக்க வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 102/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்கு பொறியியல் பீடமொன்றை நிறுவுதல்,— ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற்சந்தைக்கான தேவைகளை நிவர்த்தி செய்யும் நவீன தொழில்நுட்ப பட்டதாரிகளை வழங்கும் பல்கலைக்கழகம் என்பதால், இலங்கையில் வளர்ச்சியடைந்து வரும் நிர்மாணம், இயந்திரவியல், கைத்தொழில் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகள் உள்ளிட்ட உலகளாவிய தேவைகளையும் கருத்திற் கொண்டு ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்கு பொறியியல் பீடமொன்றை நிறுவ வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 103/2025

கௌரவ ரோஹண பண்டார,— நீச்சல் திறமைகளை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை தயார் செய்தல்,— நீரிழ் மூழ்கி உயிரிழக்கும் ஆட்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதை அண்மைக் காலமாக அவதானிக்கக் கூடியதாக உள்ளதாலும், மிகச் சிறந்த நீர்ப்பாசன நாகரீகத்திற்கு உரிமைகூறும் பண்டைய கால மக்கள் மத்தியில் காணப்பட்ட நீச்சல் திறமைகளை, இன்றைய பரம்பரையினர் மத்தியிலும் மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.109/2026

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவைத் தாபித்தல்,— வடக்கு கிழக்கில் சுமார் 26 வருடங்களுக்கு மேலாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புகள், காணாமல்போதல் மற்றும் ஏனைய அழிவுகள் தொடர்பாக கண்டறிவதற்கும், தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புதல் மற்றும் அது தொடர்பாக மேற்கொள்ளக்கூடிய அடுத்தகட்ட நகர்வுகளை ஆராய்வதற்குமான செயன்முறைகளை வலுவூட்டுவதற்காகவும் உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவொன்று (Truth Commission) தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.110/2026

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேகர,— 15 வயதிற்கு குறைந்த சிறுவர்களின் சமூக ஊடகப் பயன்பாட்டை மட்டுப்படுத்தும் சட்ட வழிமுறையை அறிமுகப்படுத்தல்,— மிகுதியான சமூக ஊடகப் பயன்பாடு காரணமாக சிறுவர்கள் மத்தியில் மன அழுத்தமும் மன உளைச்சலும் அதிகரித்தல், கல்விச் செயலாற்றுகையில் வீழ்ச்சி, இணையவழித் துன்புறுத்தல் (cyberbullying), நாகரிகமற்ற மற்றும் பாதுகாப்பற்ற உள்ளடக்கங்களை பார்க்க நேரிடுதல் போன்ற சிக்கல்கள் அதிகரித்து வருவதாலும், அவுஸ்திரேலியா, பிரான்ஸ், டென்மார்க் போன்ற வளர்ச்சி அடைந்துள்ள நாடுகள் சிறுவர்களின் சமூக ஊடகப் பயன்பாட்டை மட்டுப்படுத்துவதற்கான சட்டங்களை ஏற்கெனவே அறிமுகம் செய்துள்ளதாலும், சிறுவர்களின் உள ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் கல்விசார் வளர்ச்சியைப் பேணுவதற்காக சமூக ஊடக கணக்குகளைத் திறப்பதற்கான ஆகக்குறைந்த வயதாக 15 வயதை நிர்ணயித்தல், சமூக ஊடகக் கம்பனிகளுக்கு வயது மெய்யுறுதிப்படுத்தலை கட்டாயமாக்குதல், சட்டத்தை மீறுகின்ற நிறுவனங்கள் மீது அபராதம் விதித்தல் மற்றும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுதல், வயது வந்தவர்களின் கணக்குகளைப் பயன்படுத்தி சமூக ஊடகங்களை உசாவும் சிறுவர்கள் குறித்து பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற நகர்வுகளை முன்னெடுப்பதற்காக 15 வயதிலும் குறைந்த சிறுவர்களின் சமூக ஊடகப் பயன்பாட்டை மட்டுப்படுத்தும் சட்ட ரீதியான வழிமுறையொன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 112/2026

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குதல்,— நீண்டகாலத் தன்னிச்சையான தடுத்துவைப்புகளை இயலுமாக்குவதற்கும் சித்திரவதைகள் மூலம் போலி வாக்குமூலங்களைப் பெறுவதற்கும் சிறுபான்மைச் சமூகங்களையும் சிவில் சமூகக் குழுக்களையும் இலக்கு வைப்பதற்கும் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் 40 ஆண்டுகளுக்கும் மேலாகப் பயன்படுத்தப்பட்டு வருவதாலும், அத்தியாவசியமான சந்தர்ப்பங்களில் மாத்திரம் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்படலாம் என்பதாலும், பயங்கரவாதம் தொடர்பான குற்றங்கள் ஏற்கனவே தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் வழக்குத் தொடரப்படக்கூடியவையாக இருப்பதாலும், பாரிய அதிகாரங்களைக் கொண்ட நிரந்தரமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமொன்றுக்கான நியாயப்படுத்தல்கள் எவையும் இல்லையென்பதாலும், இதேபோன்ற ஏற்பாடுகளைக் கொண்ட எந்தவொரு பதிலீட்டுச் சட்டவாக்கத்தினையும் அறிமுகப்படுத்தாமல், 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக நீக்குவதற்கு இலங்கை அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 114/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— உலகச் சுற்றாடலைப் பாதுகாத்தல்,— உலகச் சுற்றாடலைப் பாதுகாப்பது தொடர்பில் இலங்கை அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும், குறிப்பாகப் புவி வெப்பமடைவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா. 115/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஏமாற்றப்பட்ட வைப்பாளர்களின் நிதியை மீளச் செலுத்துதல்,— பதிவுசெய்யப்பட்ட நிதிக் கம்பனிகளில் நிதியை வைப்புச் செய்த பெருமளவிலான வைப்பாளர்கள் ஏமாற்றப்பட்டுள்ளதால் அவ்வாறு அக்கம்பனிகளில் வைப்புச் செய்தவர்களுக்கு அந்த நிதியை மீளச் செலுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் இக்கம்பனிகளின் பாதுகாவலர் என்ற ரீதியில் இலங்கை மத்திய வங்கி இது தொடர்பில் அதிக கவனத்துடன் செயற்பட வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா. 116/2026

கௌரவ சமிந்த விஜேசிறி,— அரச வைத்தியசாலைகள் கட்டமைப்பின் வெளிநோயாளர் பிரிவுகளில் நிலவுகின்ற நெருக்கடியைக் குறைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரித்தல்,— உலக சுகாதாரச் சுட்டிகளின் தரவரிசைப்படுத்தலில் எமது நாடு எந்த இடத்தில் காணப்பட்ட போதிலும், அரச வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவுகளில் காணப்படுகின்ற பாரிய நெருக்கடியைக் கட்டுப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 117/2026

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— யானை - மனித மோதல்கள் அதிகமாக இடம்பெறுகின்ற பிரதேசங்களில் தேனீ வளர்ப்பை ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரித்தல்,— புள்ளிவிபரத் தரவுகளுக்கமைவாக யானை – மனித மோதல்கள் அதிகமாகக் காணப்படுகின்ற ஒரு நாடாக இலங்கை தற்போது மாறியுள்ளதாலும், அதன் காரணமாக வருடாந்தம் அதிக எண்ணிக்கையிலான மனிதர்கள் மற்றும் யானைகள் உயிரிழப்பதாலும், சொத்துக்கள் உட்பட பௌதிக வளங்கள் அழிவடைவதாலும், இந் நிலைமையினைத் தடுப்பதற்கானதொரு முன்னோடிக் கருத்திட்டமாக கென்யா போன்ற நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படுவதைப் போன்று, யானை – மனித மோதல்கள் இடம்பெறுகின்ற பிரதேசங்களில் தேனீ வளர்ப்பை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 119/2026

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— வட மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களில் பணியாற்றுகின்ற யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் நலன் கருதி முறையான தங்குமிட வசதிகள் அல்லது அடுக்குமாடி வீட்டுத் திட்டங்களை நிறுவுதல்,— யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டு பல சிரமங்களுக்கு மத்தியில் பணியாற்றுகின்ற அரச உத்தியோகத்தர்களினதும் ஆசிரியர்களினதும் போக்குவரத்து நெருக்கடிகள் மற்றும் தங்குமிட பிரச்சினைகளுக்கு நிலையானதொரு தீர்வினை வழங்குதல் மற்றும் அவர்களின் சேவையை வினைத்திறனாக பெற்றுக் கொள்வதனை உறுதி செய்வதற்காக, அந்தந்த மாவட்டங்களில் மையப்படுத்திய ஒரு பிரதேசத்தில் அல்லது பொருத்தமான ஓரிடத்தில் சகல வசதிகளுடன் கூடிய முறையான தங்குமிட வசதிகளைக் கொண்ட அல்லது அடுக்குமாடி வீட்டுத் திட்டங்களை அரசாங்கம் துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.120/2026

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— இலங்கையின் கடல்சார் வளங்களை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கும், கடல் சார்ந்த கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் சமுத்திர பல்கலைக்கழகமொன்றைத் (Ocean University) தாபித்தல்,— இலங்கையைச் சூழவுள்ள ஆழ்கடல் மற்றும் கரையோரக் கடல் வளங்களை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ரீதியாக கையாள்வதற்குத் தேவையான மனித வளங்களை உருவாக்குவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும் என்பதால், வட மாகாணத்தில் அதிகளவான கடல்சார் ஆற்றல் சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ள முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் சமூகத்தினரின் வாழ்வாதாரத்தை நவீனமயப்படுத்துவதற்கும், இளைஞர் யுவதிகளுக்கு கடல்சார் பொறியியல், கடல்சார் ஆய்வு மற்றும் நீரியல் வள முகாமைத்துவம் போன்ற துறைகளில் உயர்கல்வி வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதற்கும், அனைத்து வசதிகளுடன் கூடிய சமுத்திர பல்கலைக்கழகமொன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் தாபிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 121/2026

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— யாழ்ப்பாண மாவட்டத்தின் தீவுப் பகுதிகளை அண்டிய பிரதேசங்களிலும் கரையோரக் கிராமங்களிலும் நிலவுகின்ற கடுமையான குடிநீர் பற்றாக்குறைக்கு நிரந்தரத் தீர்வாக கடல்நீர் சுத்திகரிப்பு கருத்திட்டங்களை (Desalination Plants) விரிவாக்குதல்,— யாழ்ப்பாண மாவட்டத்தின் பெரும்பாலான பிரதேசங்களில் நிலத்தடி நீரானது உவர் நீராக மாற்றமடைந்து வருவதனாலும், குறிப்பாக வேலணை மற்றும் நயினாதீவு ஆகிய தீவகப் பகுதிகளில் பொதுமக்கள் குடிநீர் வசதிகளைப் பெறுவதில் கடுமையான சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருவதனாலும், ஏற்கனவே நயினாதீவு போன்ற பிரதேசங்களில் காணப்படுகின்ற நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கொள்ளளவை அதிகரிப்பதற்கும், குறிகட்டுவான் ஊடாக குழாய் நீர் வழங்கல் கருத்திட்டத்தை துரிதப்படுத்துவதன் மூலம் மக்களின் அடிப்படைத் தேவையாகிய சுத்தமான குடிநீரை இப்பிரதேச மக்களுக்கும் பெற்றுக் கொடுப்பதை உறுதிப்படுத்துவதற்கு கடல்நீர் சுத்திகரிப்புக் கருத்திட்டங்களை விரிவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் முன்னுரிமையளிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 122/2026

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— வட மாகாண இளைஞர்களிடையே வேகமாகப் பரவிவரும் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான விசேட செயலணியொன்றைத் தாபித்தலும் நவீன புனர்வாழ்வு நிலையங்களை அமைத்தலும்,— அண்மைக் காலமாக வட மாகாணத்தில் அதிகரித்துள்ள போதைப்பொருள் தீத்தொழில் மற்றும் போதைப்பொருள் பாவனை காரணமாக சமூகக் கட்டமைப்பானது நலிவுற்றுள்ளதோடு பாடசாலை மாணவர்களின் எதிர்காலத்திற்கும் பாதிப்பை ஏற்படுவதாலும், போதைப்பொருள் விநியோக வலையமைப்பை கட்டுப்படுத்துவதற்கு பாதுகாப்புத் தரப்பினரின் ஒருங்கிணைப்புடன் கூடிய விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கான விசேட செயலணியொன்றைத் தாபிப்பதற்கும், போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ள இளைஞர்களை நல்வழிப்படுத்துவதற்காக வட மாகாணத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய அரச புனர்வாழ்வு மற்றும் ஆலோசனை நிலையங்களை அமைப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 123/2026

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— வட மாகாணத்தில் பனை மற்றும் தென்னை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதிக் கைத்தொழிற்சாலைகளை நிறுவி வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பங்களை உருவாக்குதல்,— வடக்கு மாகாணத்தில் பெருமளவில் காணப்படுகின்ற பனை மற்றும் தென்னை ஆகியவற்றை வெறும் மூலப்பொருட்களாக மாத்திரம் பயன்படுத்தாது, நவீன தொழில்நுட்பப் பயன்பாட்டுடன் பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புகளாக உற்பத்திச் செய்யும் ஏற்றுமதிக் கைத்தொழிற்சாலைகளை அரச மற்றும் தனியார் துறையினரின் பங்களிப்புடன் மாவட்ட மட்டத்தில் நிறுவுவதற்கும், அதன் மூலம் அப்பிரதேசங்களில் வேலைவாய்ப்பற்ற இளைஞர், யுவதிகள் மற்றும் பட்டதாரிகளின் வாழ்வாதார வழிகளைப் பாதுகாப்பதற்கும் அரசாங்கம் திட்டங்களை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 124/2026

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— வட மாகாணத்தில் பாதுகாப்புப் படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவித்தலும் விவசாய மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக அக்காணிகளைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்குதலும்,— யுத்தத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட மீள்குடியேற்றச் செயன்முறையின் போது, பொதுமக்களின் காணிகள் இதுவரை முழுமையாக விடுவிக்கப்படாதிருப்பதினாலும், அதன் காரணமாக அவர்கள் தமது பாரம்பரிய விவசாய நடவடிக்கைகளிலும் மீன்பிடித் தொழிலிலும் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளை இழந்துள்ளதனாலும், இதுவரை விடுவிக்கப்படாதுள்ள பொதுமக்களின் எஞ்சிய காணிகளை, தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் துரிதமாக விடுவிப்பதற்கும், பொதுமக்களின் வாழ்வாதார வழிகளை மீண்டும் கட்டியெழுப்பும் விவசாய மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக மேற்படி காணிகளைப் பயன்படுத்துவதற்கான அனுமதியை வழங்குவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 128/2026

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— வட மாகாணத்தின் வன்னி மற்றும் யாழ்ப்பாணத் தீவகப் பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியப் பற்றாக்குறை மற்றும் டிஜிட்டல் கல்விசார் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குதல்,— வன்னி மற்றும் யாழ்ப்பாணத் தீவகப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலப் பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்களை மாவட்ட ரீதியிலான நியமனங்களின் மூலம் நிரப்புவதற்கும், அப்பிரதேசங்களில் உள்ள மாணவர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் பொருட்டு நவீன கணினி ஆய்வுக்கூடங்கள் மற்றும் முறையான இணைய வசதிகளை ஏற்படுத்துவதற்கும், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு மேலதிக கல்வி வாய்ப்புகளை வழங்கும் வகையில் சிறப்பு உதவித்தொகைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 129/2026

கௌரவ ரீ. கே. ஜயசுந்தர,— இலங்கையின் பாரம்பரிய கைத்தொழில்களை மேம்படுத்துதல்,— மூங்கில், பிரம்பு, கோரை, கித்துள் போன்ற தாவரங்களின் தண்டுகள், போலித்தண்டுகள் மற்றும் இலைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பாரம்பரிய கைத்தொழில்கள் மூலம், இலங்கையின் கைத்தொழில் மற்றும் சுற்றுலாத்துறைகளுக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கமுடியும் என்பதாலும், இலங்கையின் கைத்தொழில் மற்றும் சுற்றுலாத் துறைகளில் தற்போது ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சிக்கு இணையாக அத்தகைய பாரம்பரிய கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கு அவசியமான தொழில்நுட்பத்தை வழங்குவதற்கும், அவற்றின் உற்பத்திக்கான சந்தையை விரிவுபடுத்துவதற்கும், அவற்றிற்கு உத்தியோகபூர்வமாக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கும், பாரிய அளவிலான கைத்தொழில்களை உருவாக்குவதற்காக மேற்படி தாவரச் செய்கைகளை ஊக்குவிப்பதற்கும், அதற்கான தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கும், அக்கைவினைஞர்களின் உழைப்பிற்கும், திறமைக்கும் உயர்ந்த மதிப்பளிக்கவும், அவர்களின் ஓய்வுகால வாழ்க்கையைப் பாதுகாக்கும் திட்டமொன்றை உருவாக்கவும் தேவையான செயற்பாட்டுப் பொறிமுறை ஒன்றை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 131/2026

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பொது இடங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களில் சூரிய சக்தியினால் இயங்கும் மின்னேற்ற அலகுகளைப் பொருத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்,— மின்சாரத்தினால் மாத்திரம் இயங்கும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களின் பயன்பாடு தற்பொழுது மக்களிடையே பிரபலமடைந்துள்ளதாலும், அது சுற்றாடல் மாசடைவதைக் குறைப்பதற்கு மிகவும் முக்கியமானதொரு நடவடிக்கையாக அமைவதாலும், தற்பொழுது நிலவும் அதிகளவிலான எரிபொருள் நுகர்வுக்கு ஒரு தீர்வாகவும் எரிபொருளுக்காகச் செலவிடப்படும் அதிக செலவினத்திற்குப் பொருத்தமானதொரு தீர்வாகவும் அமைவதாலும், மின்சாரத்தில் இயங்கும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களின் பயன்பாடு காரணமாக மின்சார பயன்பாடு அதிகரிக்கக்கூடும் என்பதாலும், ஏதேனும் மின்துண்டிப்பு ஏற்படுமாயின் அவற்றை உபயோகிக்கும் மக்கள் கடுமையான அசௌகரியங்களுக்கு உள்ளாவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக உள்ளதாலும், மின்சாரத்தில் இயங்கும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களைப் பயன்படுத்தும் மக்களுக்கு நிவாரணமளிப்பதற்காகவும் மின்சாரத்தில் இயங்கும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்கள் மூலம் தூரப் பிரயாணங்களை மேற்கொள்ளும் மக்களின் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களின் மின்கலங்களை மின்னேற்றம் செய்துகொள்வதற்கான வசதிக்காகவும் பொது இடங்களிலும் அரசாங்க நிறுவனங்களின் வளாகங்களிலும் சூரிய சக்தியினால் இயங்கும் மின்னேற்ற அலகுகளைப் (Solar Charging Points) பொருத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 134/2026

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— 1988/90 காலப்பகுதியில் இடம்பெற்ற சிவில் யுத்த சூழ்நிலை மற்றும் அதுபோன்றதொரு நிலை மீண்டும் ஏற்படுவதைத் தடுப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக ஆணைக்குழுவொன்றைத் தாபித்தல்,— 1988/90 காலப்பகுதியில் இலங்கையில் மக்கள் விடுதலை முன்னணியை அடிப்படையாகக் கொண்டு இடம்பெற்ற சிவில் யுத்த சூழ்நிலையால் ஏற்பட்ட அழிவின் பொருளாதார ரீதியான பெறுமதியும், உண்மையில் அச்சூழ்நிலைக்கு ஏதுவாய் அமைந்த சம்பவத்தின் பின்னணியில் காணப்பட்ட இளைஞர் எழுச்சியும், அதன் அரசியல் சித்தாந்தங்களும் உள்ளடங்கலாக அவ்வாறானதொரு சூழ்நிலை மீண்டும் ஏற்படாமலிருப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் சிறந்த முறையில் ஆராய்வதற்காக ஆணைக்குழுவொன்றைத் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.137/2026

கௌரவ சுரங்க ரத்நாயக்க,— முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கு விசேட சலுகைகள் மற்றும் வசதிகளை வழங்குவதற்குப் பொருத்தமான முறையியலொன்றைத் தயாரித்தல்,— இலங்கையில் முச்சக்கர வண்டிப் போக்குவரத்துச் சேவையானது, பொதுமக்களின் அன்றாடப் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் மிகவும் முக்கியமான சேவையை ஆற்றுகின்றமையினாலும், 'PickMe' மற்றும் 'Uber' போன்ற டிஜிட்டல் போக்குவரத்துச் சேவைகளுடன் இணையாமல் சுயாதீனமாகச் சேவையாற்றும் முச்சக்கர வண்டி உரிமையாளர்களும் சாரதிகளும் பல்வேறு பொருளாதார மற்றும் தொழில்சார் சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றமையினாலும், எரிபொருள் விலை உயர்வு மற்றும் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமங்கள் காரணமாக சுயாதீன முச்சக்கர வண்டிச் சாரதிகளின் அன்றாட வருமானத்திற்கும் வாழ்வாதாரத்திற்கும் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளமையினாலும், அவர்களுக்காக விசேட நிவாரணங்கள் மற்றும் வசதிகளை வழங்குவதற்கான முறையான வேலைத்திட்டமொன்றைச் செயற்படுத்துவதற்கு, பொருத்தமான ஒழுங்குறுத்தல் மற்றும் தொழில்சார் பாதுகாப்பு வழிமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கும், தொழில்முறை முச்சக்கர வண்டிச் சாரதிகளுக்குப் பதிவு செய்யும் முறையியலொன்றின் கீழ் விசேட எரிபொருள் ஒதுக்கீடு (Fuel Quota) அல்லது சலுகை அடிப்படையிலான எரிபொருளைப் பெற்றுக்கொடுக்கும் முறையியலொன்றைத் தயாரிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.